


மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
எல்லாவித துணிகளையும், அலுமினியப் பாத்திரங்களையும், கண்ணாடி வகைகளையும் ஆச்சரியப்படத் தக்க முறையில் சுத்தமாக்குகிறது.



Registered at the G. P.O. as a Newspaper விலை சதம் 20

# ஈழநாடு

EELA NADU

வாரமலர்

தேசிய தினசரி — National Tamil Daily

மலர் 9 — இதழ் 51

பராபவ பங்குனி 19 ஜுல்ஹஜ் 21 (2-4-67) ஞாயிற்றுக்கிழமை



★ ★

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்றோட், யாழ்ப்பாணம்.


# விவசாயிகளின் கஷ்டங்களை நீக்க உடன் நடவடிக்கை

## அமைச்சர், அதிகாரிகளுக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு, சனி

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் விற்பனை செய்வதில் விவசாயிகளுக்கு கஷ்டமிருப்பதாகத் தகவல் கிடைத்தால், அவர்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் திரு. டட்லி

[12-ம் பக்கம் பார்க்க]

## "ஆசிரியர்களுக்கு விவசாயப்பயிற்சி அவசியம்"

### வித்தியாதிபதி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஆசிரியர்கள் விவசாயப் பயிற்சி பெறுவதால் அவர்கள் வாழ்க்கையில் உயர்ச்சி பெறுவதோடு பாடசாலைகளிலும் முக்கிய ஸ்தானத்தைப் பெறுகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் விவசாயப்பயிற்சி பெறவேண்டியது மிகமிக முக்கியமாகின்றது"

மேற்கண்டவாறு நேற்றுக்காலை நடைபெற்ற வட இலங்கை விஞ்ஞானவிவசாய ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில வித்தியாதிப்தி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் மத்திய கல்

[12-ம் பக்கம் பார்க்க]

## அண்ணு- மேனன் சந்திப்பு

சென்னை, ஏப். 1

இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் இன்று சென்னையில் தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு. சி. என் அண்ணுதுரையைச் சந்தித்துப் பேசினார். இருவரும் சுமார் அரைமணி நேரம் பேசினர்.

காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜரையும் சுதந்திரா கட்சி ஸ்தாபக தலைவர் திரு. ராஜாஜியையும் திரு. மேனன் சந்தித்துப் பேசினார்.

லோகசபைக்கான தென் சென்னைத் தொகுதி உபதேர்தலில் திரு. மேனன் போட்டியிடலாமென சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி ஆதாரமற்றவையென திரு. அண்ணுதுரை மறுத்தார்.

## "கூட்டுறவு இயக்கத்துக்கு சாதக நிலையைக்காணோம்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கூட்டுறவு ஒரு வாழ்க்கை வழி. பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தைப் பூரணமாக அடையச் செய்வது இவ்வழியைப் பின்பற்றுபவர்களாகிய எமது உத்தரவாதம். கூட்டுறவுக் கொள்கைகளிலிருந்து இவைகளை வழுவாது காத்தல்வேண்டும். கூட்டுறவு நுகர்ச்சியாளர் இயக்கம் மிகவும் கஷ்டமான ஒரு சந்தர்ப்பத்தில் இன்று சிக்கியுள்ளது. இந்த அபாயகரமான நிலையிலிருந்து வெற்றிபெற ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும். கூட்டுறவு இயக்கத்துக்கு தற்போதைய அரசாங்கம் எவ்வளவு தூரம் அனுகூலமாக உள்ளது என்பதை எம்மால் அறிய முடியவில்லை. ஆனல் நுகர்ச்சியாளர் இயக்கத்தை வளரச் செய்வதற்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கொள்கைகள் சற்றேனும் அனுகூலமாக வில்லை."

மேற்கண்டவாறு நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினது 23.ம் ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டத்தினையொட்டி மேற்படி சமாசத் தலைவர். திரு. ஏ. ஜே, இராஜதுரைசிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

[12-ம்பகக்ம் பார்க்க]

## சீனவில் கிளர்ச்சி

ஹாங்காங், ஏப். 1

சீனவில் சிக்கியாங் மாகாணத்தில்மா-ஸே-துங் எதிர்ப்பாளரின் கிளர்ச்சியை அடக்க ராணுவம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் நிலைமை கட்டுச்கடங்கி யிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

சீன அதிபர் லியு-ஷா-சியை சீனப் பத்திரிகைகள் பகிரங்கமாக எதிர்த்துள்ளன.

## பதவியில் [illegible]டிக்க விரும்பவில்லை

புதுடில்லி, ஏப். 1

இந்தியாவின் இப்போதைய உப ஜனதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசைன், தாம் அடுத்த ஐந்துவருட காலத்துக்கு இதே பதவியிலிருக்க விரும்பவில்லையென அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறார்.

## வீடுகளில் கொள்ளை

ஹைதராபாத், ஏப். 1

ஆந்திராவில் பாரஞ்சல் என்ற கிராமத்தில் ஆயுதந்தாங்கிய நூறுபேர்கொண்ட கோஷ்டியொன்று சில வீடுகளில் நுழைந்து பொருட்களைச் சூறையாடியது, இதில் இருவர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்தனர். பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## ரஷ்ய பாதுகாப்பு மந்திரி காலமானர்

மாஸ்கோ, ஏப். 1

சோவியத் பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மலினேவ்ஸ்கி நேற்று காலமானர். 68 வயதான மலினேவ்ஸ்கி சோவியத் வீரப் புதல்வர்களில் ஒருவராக விளங்கியவர்.

மலினேவ்ஸ்கியின் பூதவுடல் திங்கட்கிழமை மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் கிரம்ளின் சுவர் அருகில் பூரண மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும்.

சென்ற உலகயுத்த முடிவில் பேர்லினுக்குள் சோவியத்படையைத் தலைமை தாங்கி அழைத்துச் சென்ற வீரர் மார்ஷல் மலினேவ்ஸ்கிஏழுதடவைகள்லெனின் விருது வழங்கப்பட்ட இவர் சோவியத்தின் வீரப் புதல்வன் என்ற மிக உயர்ந்த விருதும் பெற்றவராவார்.

# உ. பி. காங்கிரஸ் மந்திரி சபை ராஜினமா

லக்ஷ்மணபுரி, ஏப். 1

வடஇந்திப ராஜ்யங்களில் ஒன்ருன உத்தர பிரதேசத்தில் தேர்தலுக்குப்பின் பதவியேற்ற காங்கிரஸ் மந்திரிசபை இன்று ராஜினமாச் செய்தது. கவர்னர்உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த திருத்தப் பிரேரணையொன்றுசபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் மந்திரிசபை ராஜினமாச் செய்யவேண்டியதாயிற்று.

திருத்தப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் உத்தர பிரதேச முதன் மந்திரி திரு. சி. பி. குப்தா தமது மந்திரி சபையின் ராஜினமாவை கவர்னர் விஸ்வநாததாஸிடம் சமர்ப்பித்தார். புதிய மந்திரிசபை அமைக்கப்படும்வரை அவரைப் பதவியிலிருக்கும்படி கவர்னர் கேட்டிருக்கிறார்.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் முன்னாள் மந்திரி திரு. சரண்சிங் பேசுகையில் தாமும் மற்றும் சிலரும் காங்கிரஸிலிருந்து விலகி 'ஜன காங்கிரஸ்' என்ற புதியகட்சி அமைக்கப் போவதாகத் தெரிவித்தார். தேர்தலுக்குப்பின் காங்கிரஸ் புது அத்தியாயம் ஆரம்பிக்குமென [illegible] பார்த்த மக்கள் ஏமாற்றமடைந்துவிட்டனரென்றார்.


சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு




டொலர்
அலுமினியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் அரசியல் நிருபர்

# அகலவத்தையில் தமிழரசார்

# தேர்தல் பிரசாரம்

## தேசிய அரசாங்கத்துக்கு மூன்ருவது ஆண்டு

அகலவத்தை உபதேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரை அதாவது [தேசிய அரசாங்கம்] ஆளும் கட்சி அபேட்சகரை ஆதரித்து நடைபெறும் பிரசாரக் கூட்டங்களில் தமிழரசுக் கட்சித்தலைவர்களும் பேச அழைக்கப்பட்டிருக்கிருர்கள். ஆளும்கட்சிக்கு ஆறு உபதேர்தல்களில் தோல்வியடைந்த பின்னர் தான் இந்த அரசியல் ஞானம் தோன்றியிருக்கிறது. அகலவத்தை தேர்தல் பிரசாரத்தில் தமிழரசுக் கட்சியிலிருந்து யார் கலந்துகொள்வார்? தமிழரசுக் கட்சியைப் பற்றியும் தமிழ்மக்களைப் பற்றியும் சிங்களமக்கள் மத்தியில் சில அரசியல் வாதிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தப்பபிப்பிராயத்தை ஓரளவாவது நீக்குவதற்கு தமிழரசுக் கட்சிக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இடம் பொருள் ஏவல் அறிந்து பேசக்கூடியவர்கள் அகலவத்தைக்குச் செல்லவேண்டும்.

பலாங்கொடை, பண்டாரவளை, பெந்தர-எல்பிட்டித் தொகுதிகளில் நடந்த முதலாவது உபதேர்தல்களின் போது எதிர்க்கட்சியினர், தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி அங்கம் வகிப்பதையும் தமிழரசுக்கட்சிக்கும் யு. என். பிக்குமிடையில் இரகசிய ஒப்பந்தமிருக்கிறதென்பதையும் தங்கள் பிரசாரத்துக்குப் பயன்படுத்தினர். இந்த உபதேர்தல்களில் ஆளும் கட்சிக்கு தோல்வியேற்பட்டதும் ஆளும்கட்சி எம். பி. க்கள் பலர், அந்தத் தோல்விக்கு தமிழரசுக்கட்சியுடன் யு. என். பிக்குள்ள உறவும், உபதேர்தல் சமயத்தில் அமைச்சர் திருச்செல்வம் உட்பட தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் மாவட்டசபை பற்றியும் தமிழர் உரிமை பற்றியும் கூட்டங்களிலும் அறிக்கைகளிலும் கருத்து வெளியிட்டது தான் காரணமென்று கூறினர். அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் சலசலப்புக்கூட ஏற்பட்டது. அந்த உபதேர்தல் சமயத்தில் தமிழரசு-யு. என். பி. உறவுபற்றி எதிர்க்கட்சியினர் செய்துவந்த பிரசாரத்தை முறியடிக்க யு. என். பி. தலைவர்கள் எதிர்ப் பிரசாரம் செய்தும் அதில் அவர்கள் வெளியிட்ட கருத்து வடக்கு கிழக்கில் தமிழரசுக்கட்சியினருக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்தியது. இந்நிலையைச் சமாளிக்க அதாவது தங்களைப் பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்து அனுப்பிய வடக்கு கிழக்கு மாகாண மக்களைச் சமாதானப் படுத்த தமிழரசுக்கட்சித் தலைவர்கள் கூட்டங்களிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் தங்கள் நிலையை எடுத்துச் சொல்ல வேண்டியதாயிற்று. இதன் பின் நடந்த உபதேர்தல் சமயங்களிலும் கூட இதே நிலைதான் ஏற்பட்டது. இதில் தமிழரசுக் கட்சியினர் மீது தவறு சொல்ல இடமில்லை.

முதல் உபதேர்தல் சமயத்திலேயே ஆளும் கட்சி அபேட்சகரை ஆதரித்து பிரசாரம் செய்ய தமிழரசுக்கட்சியினரையும் அழைத்திருந்தால், எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்களையும் இரகசிய ஒப்பந்தப் பிரசாரத்தையும் தமிழரசுக் கட்சியினரைக் கொண்டே முறியடித்திருக்கலாம். முதல்மூன் [illegible] தி உபதேர்தல்கள் முடிவடைந்ததும் நான் இக்கருத்தை இப்பத்தியில் எழுதியிருந்தேன். உபதேர்தல் பிரசாரத்துக்கு தமிழரசுக்கட்சியினரை அழைத்து, எதிர்க்கட்சியினரின் பிரசாரத்தை முறியடிப்பது மட்டுமல்லாமல் தேசிய ஒற்றுமையையும் அதன் மூலம் எடுத்துக் காட்டியிருக்கலாம். தமிழரசுக்கட்சியினரை அழைக்காமல் ஏற்பட்ட தோல்வியை விட, அவர்களை அழைத்து ஏற்படும் தோல்வி பெரிதல்ல.

### அகலவத்தையில் அரசியல் ஞானம்

அகலவத்தைத் தொகுதி உபதேர்தலுக்கான அபேட்சாபத்திரங்கள் சென்ற 29-ந் திகதி தாக்கல் செய்யப்பட்டன. ஆளும்கட்சியான யு. என். பி.யின் சார்பில் டேவிட் அப்புகாமி போட்டியிடுகிருர். எதிர்க் கட்சிக்கூட்டணியின் சார்பில் லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போட்டியிடுகிருர். அகலவத்தைஇதுவரை இடதுசாரி அதாவது சமசமாஜக்கட்சியின்கோட்டையாகவே இருந்துவந்திருக்கிறது. சென்ற தேர்தலிலும் திரு. அனில் முனசிங்காவே இத்தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணையின் முடிவில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் விளைவாகவே அனில் முனசிங்கா ஸ்தானமிழந்தார். திரு. முனசிங்கா முன்னைய கூட்டரசாங்கத்தில் போக்குவரத்து அமைச்சராகவும் இருந்தவர். தமது தொகுதிக்கு அவர் நல்ல சேவையும் செய்திருக்கிருர். இத்தொகுதியில் சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நிறுத்தப்பட்டிருக்கிருர் டாக்டர் கொல்வின் தெகிவளை-கல்கிசை தொகுதியில் போட்டியிட்டு சென்ற தேர்தலில் தோல்வியடைந்தவர். ஆயினும் சென்ற பொதுத்தேர்தலில் தமது பழைய தொகுதியான ஹேவாஹெட்டாவில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த மாஜிமந்திரி டி. பி. இலங்கரத்தின சமீபத்தில் கொலன்னுவ உபதேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதனுல் ஏற்பட்ட நம்பிக்கை டாக்டர் கொல்வினை அகலவத்தையில் நிறுத்தியதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். சென்ற பொதுத்தேர்தலில் திரு. அனில் முனசிங்கா தம்முடன் போட்டியிட்டவரை விட 5197 வாக்குகள் அதிகமாகப்பெற்றிருந்தார். இம்முறை அகலவத்தை வாக்காளர் தொகை சென்ற தேர்தலிலிருந்ததைவிட [illegible] வாக்குகளால் அதிகரித்திருக்கிறது. அகலவத்தைத் தொகுதியில் ஆளும் கட்சிக்கு அதிகவாய்ப்பிருக்குமென எதிர்பார்க்க முடியாது. ஆளும்கட்சிக்கு அங்கு தோல்வியேற்பட்டாலும் கூட அது ஒருபெரிய தோல்வியாகக்கொள்ள முடியாது. எதிர்க்கட்சியினருக்கு அங்குவெற்றி கிடைத்தாலும் அதைப் பெரியவெற்றியாகக்கருத முடியாது. இந்த உபதேர்தல் எதிர்க்கட்சியினருக்கு தங்கள் ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் ஆளும் கட்சியினருக்கு புதிய ஸ்தானம் ஒன்றைக்கைப்பற்றிக்கொள்வதற்கும் நடைபெறும் ஒருபோட்டிதான். இதனுல் தான் உபதேர்தலில் தோற்ருலும் [இதற்கு முந்திய உபதேர்தல்களிலும் தோல்வி தான் கிடைத்தது] எதிர்க்கட்சியினரின் பிரசாரத்தைமுறியடிப்பதற்கு தமிழரசுக் கட்சியினரையும் பிரசாரத்துக்கு அழைப்பதென்ற முடிவுக்கு ஆளும் கட்சியினர்வரக்காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

அகலவத்தைத் தொகுதியில் போட்டியிடும் சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஒரு காலத்தில் தமிழ்மொழிக்கு சிங்களமொழியுடன் சம அந்தஸ்து கொடுக்கப்படவேண்டுமென்றும் தமிழருக்குச்சம உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்றும் தமிழ்ப் பகுதிகளில மட்டுமல்ல பார்லிமெண்டின் உள்ளேயும் போராடி வந்தவர். அகலவத்தை உபதேர்தல் பிரசாரத்தில், சிங்கள மக்களின் வாக்குகளைப்பெறுவதற்கு டாக்டர் கொல்வினை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் எதிர்க்கட்சியினர் வகுப்புவாதப் பிரசாரத்தில் ஈடுபட்டால், அதை தமிழரசுக்கட்சி அல்லது தமிழ் எம். பி. க்களைக் கொண்டு முறியடிப்பதே பொருத்தம் என்றும், இதன் மூலம் அகலவத்தைத் தொகுதியிலுள்ள தமிழ் வாக்குகளை ஆளும்கட்சி அபேட்சகருக்குச் சுலபமாகக் கிடைக்கச் செய்யலாம் என்றும் ஆளும்கட்சியினர் நினைத்திருக்கலாம்.

எது எப்படியிருப்பினும் அகலவத்தையில் ஆளும் கட்சி அபேட்சகரை ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்கு ஆளும்கட்சியில் ஓர் அங்கமாக விளங்கும், தேசீய ஐக்கியத்தையே நோக்கமாகக் கொண்ட தேசீய அரசாங்கத்தில் ஒரு சின்னமாக உள்ள தமிழரசுக்கட்சியினரையும் அழைப்பதென்ற முடிவு அரசியல் விவேகமானது என்று கூறலாம். இச்சந்தர்ப்பத்தை தமிழரசுக்கட்சியினர் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### மூன்ருவது ஆண்டு ஆரம்பம்

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து மூன்ருவது ஆண்டுஆரம்பமாகியுள்ளது. தேசிய அரசாங்கத்தை அமைத்த ஐக்கிய தேசீயக் கட்சியும் தேசீய அரசாங்கம் அமைப்பதற்குஒன்றுசேர்ந்த இதரகட்சிகளும் தேர்தல் சமயத்திலும் தேசீய அரசாங்கம் அமைத்த சமயத்திலும் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் அவற்றில் நிறைவேற்றியவைகளையும் நிறைவேற்றத் தவறியவைகளையும் நினைத்துப் பார்க்கவேண்டியகாலம் வந்துவிட்டது.

தேர்தல் முடிந்து இரண்டு ஆண்டுகள் நிறைவேறிவிட்டன. வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலைஇல்லாத்திண்டாட்டம் ஆகியவை சம்பந்தமாக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டனவா? தேசீய ஒற்றுமை தானும் பலம் வாய்ந்த அஸ்திபாரத்துடன் அமைக்கப்பட்டு விட்டதா? ஆளும்கட்சி சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்கள் சிந்தித்து முடிவு செய்யும் காலம் நெருங்கிவிட்டதென்பதை மறந்துவிடமுடியாது.

''பொதுத்தேர்தல் முடிந்ததும் அந்த வெற்றியைக் கொண்டாடுவதில் முதல் இரண்டு வருடங்கள்முடிந்துவிடும். அடுத்த தேர்தலுக்கான ஒழுங்குகளில் ஈடுபடுவதில் பின் இரண்டு வருடங்களும் முடிந்துவிடும். எனவே ஐந்து வருடங்களில் ஆட்சிபுரிவதற்கு ஒரு வருடம் தான் இருக்கிறது. இதில் என்ன செய்வது? எதைச் செய்வது?'' என்ற தொனியில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சில மாதங்களுக்கு முன் ஒரு வைபவத்தில் பேசுகையில் கருத்துத் தெரிவித்திருந்தார். இலங்கையின் அரசியல் அமைப்புப் பற்றியும் அதில் சில மாறுதல்கள் செய்ய வேண்டியதன் அவசியத்தைப்பற்றியும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறியபோதே ஐந்து வருடங்கள் ஆட்சிபுரிவதற்குப் போதாது என்பதைச் சுட்டிக்காட்டினுர்.

பொதுத்தேர்தல் முடிந்தும் தேர்தல் ஆட்சேப மனுக்கள் மீதானவிசாரணை முடிவடைவதற்கும்உபதேர்தல்கள் நடந்து முடிவதற்குமே ஐந்து வருடங்கள் போதாதிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

பொதுத்தேர்தல் முடிந்து இரண்டு வருடங்களுக்குமேலாகிவிட்டது. தேர்தல் ஆட்சேப மனுக்கள் மீதான விசாரணைகளும் அவற்றின் மீதுஅளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து செய்யப்பட்ட அப்பீல் விசாரணைகளும் இன்னும் முடிவடையவில்லை. உபதேர்தல்களும் இன்னும் நடைபெறவிருக்கின்றன. தேர்தல் முடிவடைந்ததும் தேர்தல் காலசம்பவங்களையும் தேர்தல் பிரசாரங்களையும் மறந்துவிட்டு, ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட கட்சிக்கு முழுஒத்துழைப்பையும் அளிக்கவேண்டுமென்பதே உண்மையான ஜனநாயக இலட்சியம். இலங்கையைஇந்தியாவுடன் ஒப்பிடுவது பொருத்தமற்றதாயினும் தமிழ்நாட்டுடன் ஒப்பிடலாம். இலங்கையைவிட ஜனத்தொகையிலும் பரப்பளவிலும் பெரிதான தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரங்களும் போட்டிகளும் மிகக்கடுமையாக இருந்தும் தேர்தலுக்குப்பின் இலங்கையைப் போல் அங்கு தேர்தல் ஆட்சேப மனுக்கள் அளவுக்கு அதிகமாக தாக்கல் செய்யப்படவில்லை. முழுஇந்தியாவிலும்கூட இந்தநிலை இல்லை. தமிழ்நாட்டில் முன்னர் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் தலைவர்கள் இன்று ஆட்சிக்கு வந்துள்ள தி. மு. க. கழகத்துக்கு ஆலோசனை கூறிவருவதுடன் ஒத்துழைப்பளிப்பதாகவும் உறுதி கூறியிருக்கின்றனர். ஆறு மாதங்களுக்குப் புதிய ஆட்சியின் தவறுகளைப் பெரிதுபடுத்தி கண்டிக்கப் போவதில்லையென்றும் அதாவது புதிய ஆட்சியினர் செய்யும் தவறுகளை வைத்து 'அரசியல் இலாபம்' தேட முயற்சிசெய்யப்போவதில்லை என்றும்கூறியிருக்கின்றனர்.

இலங்கையிலோ, தேர்தல் முடிந்த உடனடியாகவே, ஆட்சிக்கு வரும் கட்சிக்கு எப்படி எப்படி தொல்லை கொடுக்கலாம், எப்படி அதை வீழ்த்தலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டுவிடுகிருர்கள். நாட்டின் நலனில் உள்ள அக்கறையைவிட ஆட்சி பீடமேறுவதில்தான் இங்குள்ள கட்சிகளுக்கு அதிக அக்கறை.

தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணை நீடித்து இடையிடையே உபதேர்தலும் நடப்பதால் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சியினர் தொடர்ந்து பிரசாரம் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எதிர்க்கட்சியினரின் பிரசாரத்தை முறியடிக்கும் நடவடிக்கைகளிலேயே அரசாங்கமும் தனது முழுக்கவனத்தையும்செலுத்தநேரிடுகிறது. இதனுல் ஆக்கரீதியான காரியங்களில் ஈடுபட அரசாங்கத்துக்கு அவகாசமில்லை, முக்கிய விஷயங்களில் அரசாங்கத்துக்கு உதவியோ, ஒத்துழைப்போ அளிப்பதற்கு எதிர்க்கட்சிக்கும் சந்தர்ப்பம் இல்லை. உபதேர்தல் பிரசாரங்கள் வகுப்புவாதப் போக்கில் செல்வதால் தேசீய ஒற்றுமை ஏற்படவும் தடை ஏற்படுகிறது.

ஆட்சிக்குவரும் கட்சி எதுவானுலும் அது நாட்டின் நிர்வாகத்தில் கவனம் செலுத்தவேண்டுமானுல் தேர்தல் ஆட்சேபமனு மீதான விசாரணைகளும் உபதேர்தல்களும் முதல் வருடத்துக்குள்ளேயே முடிந்துவிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான்

## உலக மேடை

எஸ். எம். ஜி.

"ஜனாதிபதிப் பதவி வேண்டாம், என்னை விட்டு விடுங்கள்" என்று கேட்டாலும்கூட "நீங்கள் இன்னும் சிறிதுகாலத்துக்காவதுபதவியிலிருக்கவேண்டும். அப்பொழுதுதான்ஜனநாயகம் இங்கு நல்லபடி வளரமுடியும்" என்று பலரும் வற்புறுத்துவதையும், "நமக்குஜனநாயகமே வேண்டாம். சர்வாதிகாரம்தான் எங்களுக்குப் பொருத்தம்" என்று ஜனாதிபதிப் பதவியிலிருக்கும் ஒருவர்கூறுவதும்இந்திய துணைக் கண்டத்தில் இன்று காணக்கூடிய கண்காட்சிகளாக இருக்கின்றன.

இந்தியாவின் நான்காவது பொதுத்தேர்தல் முடிந்ததை அடுத்து இனி இந்திய ஜனாதிபதி (ராஷ்டிரபதி)த் தெரிவு நடைபெற இருக்கிறது. மே மாத முற்பகுதியில் இந்திய ஜனாதிபதி தெரிவு நடைபெறவிருக்கிறது. உடல்நிலை காரணமாக மீண்டும் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடப்போவதில்லை என டாக்டர் ராதாகிருஷ்ணன் சிலமாதங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். அப்பொழுது அடுத்த ஜனாதிபதியாக யாரைத்தெரிவு செய்யவேண்டுமென்பதில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. இதற்கு அது பொதுத்தேர்தல் சமயமாக இருந்ததும் ஒரு காரணமாகும். ஜனவரி 26-ம் திகதி இந்தியக்குடியரசுத் தினத்தையொட்டி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஜனாதிபதி என்ற முறையில் நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தி முன்னர்போலஇல்லாமல் 'சிறிது காரமாக' அமைந்திருந்தது. இது டாக்டர் ராதாகிருஷ்ணன் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன் நாட்டு மக்களுக்கு விடுத்த பிரியாவிடைச் செய்தியாகவும் கருதப்பட்டது. நாட்டின் பிரச்னைகளுக்கு அரசாங்கத்தின் 'திறமையின்மை' ஒரு காரணம் என்றும் 'ஊழல்' நிலவுகிறதென்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தமது உரையில் குறிப்பிட்டிருந்தது ஆளும் கட்சியான காங்கிரஸில் முணுமுணுப்பை ஏற்படுத்தியது. அரசாங்கத்தை அதுவும் தேர்தல் சமயத்தில் ஜனாதிபதி குறைகூறியது சரியல்ல என்றும் காங்கிரஸ் வட்டாரங்களில் அதிருப்திக் குரல்தோன்றியது. ஆயினும் காங்கிரஸ்காரர் சிலர் 'ஜனாதிபதி சொன்னதில் தவறில்லை' என்று உண்மையை ஒப்புக்கொண்டனர். டாக்டர் ராதாகிருஷ்ணன் நிகழ்த்திய உரை, எதிர்க்கட்சியினருக்கு அவர்மீது 'பிடித்தம்' ஏற்படுத்தியது. ராஷ்டிரபதி என்றால் வெறும் அலங்காரப் பொம்மையா? அவர் தமது கருத்தைசுதந்திரமாகவெளியிட்டிருக்கிறார். அதுதான் சரி என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். டாக்டர் ராதாகிருஷ்ணனே தொடர்ந்தும் ஜனாதிபதியாகஇருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் வலுப்பெற்று அது கோரிக்கையாக மாறியது. டாக்டர் ராதாகிருஷ்ணனே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்றாலும்கூட எதிர்க்கட்சிகளுக்கிடையில் இதிலும் கருத்து வேற்றுமை நிலவுகிறது. டாக்டர் ராதாகிருஷ்ணனே பதவியில் நீடிக்கவேண்டுமென்று சுதந்திராக்கட்சி ஸ்தாபகதலைவர் ராஜாஜி கூறுகிறார். ஆனால் சுதந்திராக் கட்சிப் பொதுச்செயலாளர் எம். ஆர். மசானி, ஜனாதிபதிப் பதவிக்கு ஜயப்பிரகாஷ் நாராயண் வரவேண்டுமென விரும்புகிறார். சுதந்திராக்கட்சிக்குள்ளேயே இதில் கருத்து வேற்றுமை நிலவுகிறது. இதேபோல் காங்கிரஸுக்குள்ளும் கருத்து வேற்றுமை இருக்கிறது. ஆனாலும் டாக்டர் ராதாகிருஷ்ணனே ஜனாதிபதிப்பதவியில் நீடிக்க வேண்டுமென்பதை பொதுவாகப்பலரும் விரும்புகின்றனர். டாக்டர் ராதாகிருஷ்ணன் பதவியிலிருந்து விலகி, அவரது இடத்துக்கு உபஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுஸெயின் வருவதை ஜனசங்கக்கட்சி விரும்பவில்லை. ராதாகிருஷ்ணன் பதவியில் நீடிப்பதையே திராவிடமுன்னேற்றக்கழகமும் விரும்புகிறது. தி.மு.க. தலைவர்களில் ஒருவரான நாஞ்சில் கே. மனோகரன், டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து தி. மு. கழகத்தின் விருப்பத்தை நேரில் தெரிவித்திருப்பதுடன் அவர் பதவியில் நீடித்திருக்கச் சம்மதித்து விட்டதாகவும் இப்போது அவரது உடல்நிலை நன்றாயிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் அக்ராசனர் காமராஜரும், பிரதமர் திருமதிஇந்திராகாந்தியும்கூட டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

ஜனாதிபதிப் பதவியில் நீடித்திருப்பதற்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் சம்மதித்திருக்கிறார்.

பொதுவாக ஜனநாயக நாடுகள்பலவற்றிலும்ஜனாதிபதி, கவர்னர்ஜெனரல்பதவிகள் வெறும் அலங்காரப் பதவிகளாகவே இருப்பதுண்டு. இப்பதவிகளில்இருப்பவர்கள்ஆளும்கட்சியிலிருப்பவர்களாலேயே தெரிவு செய்யப்படுவதுண்டு. நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாலும்கூட ஆளும் கட்சியின் விருப்பத்தையே அவர் நிறைவேற்ற வேண்டும். காலஞ்சென்ற டாக்டர் ராஜேந்திரபிரசாத் கூட, ஒருதடவை ஜனாதிபதி வெறும் அலங்காரப்பொம்மையாக இருப்பது நல்லதல்லவென்றும் அப்பதவியிலிருப்பவருக்கு அதிக சுதந்திரமும் அதிகஅதிகாரமும்வழங்கப்படவேண்டுமென்றும் கருத்துத்தெரிவித்தார். இது காங்கிரஸ் வட்டாரங்களில் திகைப்பை ஏற்படுத்தியதுடன் அவருக்கும்பண்டிதஜவஹர்லால்நேருவுக்கும் இடையில் கருத்துவேற்றுமையை ஏற்படுத்தியது. டாக்டர் ராதாகிருஷ்ணன்தமது பெயரைவிட பன்மடங்கு நீளமான டாக்டர் பட்டம் பெற்றிருப்பவர். தத்துவஞானி, அறிஞர், உலகின் பல நாடுகளுக்கும் சென்றிருப்பவர், உலகப் புகழ்பெற்றவர். கல்லூரி ஆசிரியராக இருந்தவர், பலமொழிகள் தெரிந்தவர், தமக்குச்சரியெனப்பட்டதை அச்சமின்றி எடுத்துக் கூறும் துணிச்சல் வாய்ந்தவர். இந்தியாவில் பார்லிமெண்டிலும், ராஜ்ய சட்டசபைகளிலும் மக்கள் பிரதிநிதிகள்தவறாக நடந்துகொண்ட சந்தர்ப்பங்களிலும் மாணவர்களையும் பொதுவாகமக்களையும்அரசியல்வாதிகள்தவறானவழியில் நடத்திச்சென்ற சந்தர்ப்பங்களிலும் பொதுவைபவங்களில் கண்டித்துத் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதிப்பதவியில் டாக்டர் ராதாகிருஷ்ணன் தொடர்ந்திருப்பதற்கு ஒப்புக்கொண்டபோதிலும் திரு. ஜயப்பிரகாஷ் நாராயணை அப்பதவியிலமர்த்த எதிர்க்கட்சிகள்சில தொடர்ந்து முயற்சி செய்துவருகின்றன. பதவியும் வேண்டாம், பட்டமும் வேண்டாம்என்று 'சர்வோதய' இயக்கத்திற்கு அவர் தம்மை ஒப்படைத்துவிட்டபோதிலும் அவரை மற்றவர்கள் விடுவதாக இல்லை. பதவி என்றாலே "வேண்டாம், வேண்டாம்" என அவர் ஓடினாலும் மற்றவர்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறது. ஜனாதிபதிப் பதவிக்கு திரு. ஜயப்பிரகாஷ் நாராயணைத் தெரிவுசெய்ய வேண்டும் என்று முதலில் யோசனை வெளியிடப்பட்டதுமே "வேண்டாம் எனக்கு அந்தப்பதவி. டாக்டர் ஸாகீர் ஹுஸெயினே அதற்குப்பொருத்தமானவர்" என்று திரு. ஜயப்பிரகாஷ் கூறிவிட்டார். ஆயினும்மற்றவர்கள்விடுவதாயில்லை. இனியும் அவர் பதவி வேண்டாம் என்றே சொல்லுவாரா? அல்லது ஒப்புக்கொள்வாரா?

## அயூபின் ஜனநாயகம்

இந்தியாவில் ஜனநாயகம் முறைப்படி வளர்ந்து வருகிறது. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் ஜனநாயகம் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. இதில் கஷ்டங்களும் நஷ்டங்களும் இருப்பது சகஜம்தான். ஆசிய-ஆபிரிக்கநாடுகள்பல, விடுதலையடைந்தபின் ஜனநாயகவாழ்க்கைமுறையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாமல் தோல்வியடைந்துவிட்டன. ஆயினும் ஆசியாவில் மட்டுமல்ல உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக இன்று இந்தியா விளங்குகிறது பலபல சோதனைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அது சமாளிக்க வேண்டியிருப்பினும் ஜனநாயகத்தைப்பாதுகாத்துவருகிறது. இந்திய மக்களாக வாழ்ந்த ஒரு பகுதியினர் 'பாகிஸ்தான்' தோன்றி இன்று வேற்று நாட்டுமக்களாக வாழ்கின்றனர். அவர்களும் முதலில் ஜனநாயக வாழ்க்கை முறையைப் பின்பற்றினர். எனினும் அவர்கள் வெற்றிபெறவில்லை. அங்கு பீல்ட் மார்ஷல் அயூப்கான் தலைமையில் இராணுவஆட்சி நடைபெறுகிறது. இராணுவ ஆட்சியில் பாகிஸ்தான் மக்கள் சலிப்படைந்ததைக்கண்ட அயூப்கான், இந்தோனேஷியாவைப் பின்பற்றி 'ஜனநாயகம்' என்ற பெயரில் புதிய முறையில் "அடிப்படைஜனநாயகம்" என்ற ஒன்றைக் கொண்டுவந்தார். இந்தோனேஷியாவில் நிகழ்ந்த சம்பவங்களும், நவசீன நட்பும், தமது வலதுகரமாக விளங்கிய முன்னாள் வெளிவிவகார மந்திரி ஜனாப் ஸுல்பிகார் அலி புட்டோவின் அரசியல் பிரவேசமும் அயூப்கான், "ஜனநாயகத்துக்கு பாகிஸ்தானில் இனி இடமில்லை" என்று முடிவாகக் கூறச் செய்திருக்கிறது. பாகிஸ்தானில் இராணுவ ஆட்சிதான், சர்வாதிகார ஆட்சிதான் நீடிக்கும். எந்த ஆட்சி நீடித்தாலென்ன, நாட்டு மக்கள் கஷ்டமின்றி வாழ்ந்தால் போதாதா என்று கேட்கலாம். மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை மற்றவர்கள் அறிவதற்குக்கூட சர்வாதிகார

(11-ம் பக்கம் பார்க்க)

# சாக்குருவி சோதிடம் சொன்னவர்கள் என்ன செய்வர்?

இந்திய ஜனநாயகம் கட்டாயம் அழிந்துவிடுமென்று மூன்று மாதங்களுக்கு முன்னால் ஜனநாயக நாடுகளிலும், கம்யூனிஸ்ட் உலகிலுமுள்ள பல அயல் நாட்டுப் பார்வையாளர்கள் ஜோசியம் கூறிவந்தனர்.

குடியே முழுகிப் போய்விடும் என்று ஜோசியம் கூறிய இவர்கள் அடுத்தடுத்துப் பல வகையாகவரும் பொருள்உரைத்தனர். தேர்தலே நடைபெறாது என்று டிசம்பர் மாதத்தில் இவர்கள் விடாமற் கூறிக்கொண்டிருந்தனர்; தேர்தலில் கட்டுப்படுத்தமுடியாத பலாத்காரங்கள் நிகழும் என்று ஜனவரி மாதத்தில்அவர்கள் ஜோசியம் சொல்லிக்கொண்டிருந்தனர். ஒழுக்கங்கெட்ட அரசியல் எசமானர்கள் விரும்புகிறபடிதான் முடிவுகள் இருக்குமென்று பெப்ரவரி வாக்கில் அவர்கள் விடாப்பிடியாகக் கூறிக்கொண்டிருந்தனர்.

தொட்டதெல்லாம் குற்றங்காணும் இவர்கள் கூறியது எதுவுமே பலிக்கவில்லை. இவ்வாறு பலிக்காமல் போவது இது முதல்தடவையல்ல--என்பதை 1967 பெப்ரவரி மத்தியில் நடந்த தேர்தல் புலப்படுத்தியது. குறித்த தேதியில் தேர்தல் நடைபெற்றது. அநேகமாகக் குழப்பமேதும் ஏற்படவில்லை. "எசமானர்களின்" முரட்டுக் கரங்கள் அறவே தென்படவில்லை.

15 கோடி ஆண்களும் பெண்களும் நீண்ட கியூ வரிசைகளில் பல மணி நேரம் காத்திருந்து, தாங்கள்விரும்பும் வேட்பாளர்களுக்கு வாக்களித்தகண்கொள்ளாக் காட்சி மட்டிலா உற்சாகமும் நம்பிக்கையும் ஊட்டியது தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் ஒரு சிறப்பான வருங்காலத்தைஉருவாக்கத் தகுதியுடையவர்கள் என்று தாங்கள் கருதியவர்களுக்கு அவர்கள் வாக்களித்தனர்.

கோடிக்கணக்கான இந்த வாக்காளர்கள் பிறர் கூறியபடி வாக்களிக்கவில்லை. கடந்த காலத்தில் நடந்தது போல ஜாதி, பழக்கங்கள் போன்ற பழங்காலக்குறுகிய எண்ணங்கள் முக்கிய இடம் பெறவில்லை. மக்கள் தம் மனச்சாட்சிப்படி வாக்களித்தனர். கணவர்கள் கருத்தை மனைவிமார்கள் பெரும்பாலும் ஏற்கவில்லை. தந்தைமார்கள் கூறியபடி புதல்வர்கள் செய்யவில்லை.

**செஸ்டர் போல்ஸ்**
இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதர்

முடிவுகள் குறித்து யார் என்ன நினைத்தாலும் சரி, இந்தியா முழுவதிலும் தேர்தல் ஒரு புதிய புயல் காற்றாக வீசியது. பழைய வழக்கங்களையும், பழைய தப்பெண்ணங்களையும், சில பழைய முகங்களையும் தகர்த்தெறிந்துவிட்டது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

முடிவுகள்அறிவிக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள், பெரும்பான்மைக் கட்சி பிரதம மந்திரி ஒருவரைத் தெரிந்தெடுத்து, அடுத்த 24 மணி நேரத்துக்குள் புதிய மந்திரிசபைபற்றிய அறிவிப்பு வெளியாயிற்று.

இதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு, இதுதான் மிகவும் இன்றியமையாதது என்பது எனது கருத்து.

பல வகைகளில் 1967-ம் வருஷ இந்தியத் தேர்தல், 1828-ம் வருஷ அமெரிக்கத் தேர்தலை நினைவூட்டுகிறது.

பிரிட்டிஷாருக்கு எதிரான எங்களது புரட்சிப் போருக்குப் பின்பு, கீழ்கரை மாநிலங்களைச் சேர்ந்த சிறந்த அரசியல் தலைவர்களின் குழுக்கள் அமெரிக்கக் கொள்கைகளை வகுத்தன. அவர்கள் பெரும் திறமை படைத்தவர்கள். அவர்களது பெயர் தெரியாத — பெயர் மதித்துப் போற்றாத வீடு கிடையாது.

1828-க்கு முன்பு, அவர்கள் தலைமை தாங்கிய அரசாங்கங்கள் பெரிய எதிர்ப்பு எதுவுமின்றி எங்களது தேசியக் கொள்கைகளை உருவாக்க முடிந்தது.

1828 தேர்தல் திடீரென இவையனைத்தையும் மாற்றி விட்டது.

வர்ஜீனியா, நியூயார்க், பென்சில்வேனியா போன்ற வழக்கமாக மாறுதல் விரும்பாத கிழக்கத்திய மாநிலங்களைச் சேர்ந்த ஆட்சியில் வேரூன்றிப்போன தலைவர்கள் தம் முன்பு திடீரெனஒரு புதிய எழுச்சியைக் கண்டனர். பழமைக்கு எதிரான ஓர் எழுச்சி அது. கடனில் மூழ்கிப்போயிருந்த மேல்கரைக்குடியானவர்களின் வேகம்மிக்க புதிய தலைவர்கள் அதன் முன்னணியில் நின்றனர்.

இந்தியாவில் இப்போது நடந்த தேர்தல், அமெரிக்காவில் 1828 தேர்தல் நடந்ததுபோல, புதிய சிந்தனை வேண்டும். அதிகமான செயலாக்கம் வேண்டும் என்ற பொது மக்களின் விருப்பத்தையே [illegible] என்று நான் கருதுகிறேன்.

கம்யூனிஸ்ட் சீனாவில் கொடிய பதவிப் போராட்டம் நடைபெறும் இன்றையச் சூழலில் இந்தத் தேர்தல் நடைபெற்றுள்ளது என்ற உண்மையும் இதன் முக்கியத்தை மேலும் அதிகப்படுத்துகிறது.

உலகோர், குறிப்பாக இந்திய ஜனநாயகத்தின் ஆற்றல்பற்றி ஐயம்கொள்வோர் இருநாடுகளுக்குமுள்ள வேற்றுமைகளைப் பார்த்தறிவார்களாக.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கையில் 1967-ம் வருஷ இந்தியத் தேர்தல், இந்திய ஜனநாயகத்தின் ஆற்றலுக்கு ஓர் அற்புதமான சான்று என்பது விருப்புவெறுப்பற்ற பார்வையாளர் யாவருக்கும் தெளிவாயிருக்கவேண்டும் என நான் கருதுகிறேன். விரிவான கருத்தில் சொல்வதானால், உலகம் முழுதிலும் உள்ள சுதந்திர மக்களின் தன்னம்பிக்கையை வலுப்படுத்த இந்தத் தேர்தல்பயன்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் என்போர் யார்? அவர்கள் பிறப்பிடம் யாது?

— ந. சி. கந்தையாபிள்ளை —

[சென்றவாரத் தொடர்ச்சி]

பின், இவர்களோடு ஆர்மஞேயிட்டுகள் கலந்தார்கள். ஆர்மஞேயிட்டுகளின் மண்டை தென்னிந்தியரின் மண்டையை ஒத்தது. தமிழர்களிடையே ஆர்மஞேயிட்டு, மத்தியதரை மாதிரிகளைக் காணலாம்.

திராவிடர் நாகரிகத்தில் மொகஞ்சதாரோ நாகரிக மாதிரிகள்காணப்படுவதைச் சேர் யோன் மார்சல் குறிப்பிட்டுள்ளார். சூமரிற்காணப்பட்ட மனித உருவங்களும் சுவர் ஓவியங்களும் தென்னிந்தியமக்கள் சூமர் மக்களைப்போன்ற உடற்கூறுடையவர்களாக இருந்தார்களெனக் காட்டுகின்றன. மொகஞ்சதாரோப் புதைபொருள் ஆராய்ச்சிக்கு முன் டாக்டர்ஹால் இக்கருத்தை வெளியிட்டார். சுமேரியமக்கள் சிந்துவெளி மக்களே. அவர்கள் பாரசீகத்துக்கூடாக ஐபிராத்துச் சமவெளிக்குச் சென்றார்கள். தமது பண்பாட்டுச் சின்னங்களை ஈலத்தில் விட்டுச் சென்றார்கள். தென்னிந்திய மக்கள் சிந்துவெளிக்கும் சிந்துவெளி மக்கள் தென்னிந்தியாவுக்கும் சென்றார்கள். ஒஞனிஸ் என்னும் மீன் மனிதன் பாரசீக வளைகுடாவை நீந்திநாகரிகத்தையும், கலைகளையும் சுமேரியாவுக்குக் கொண்டு சென்றான்என்னும் புராணக் கதை சுமேரியாவில் வழங்கிற்று.

திராவிடர் பற்றிய மக்களினக் கொள்கை இரண்டு வகையாகவுள்ளது. இந்திய மக்களென்போர் பின் தங்கிய ஆதிக் குடிகள் என்றும் அவர்கள் நீண்ட மண்டை உடையவர்களென்றும் கூறுவர் ஒரு சாரார். தமிழரின் ஆஸ்திரேலிய, சிந்திய, மங்கோலியத்தொடர்புக் கொள்கைகள்ஏற்றுக்கொள்ளத் தக்கனவல்லவென ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளனர். தமிழரைஆசியா மைனரிலுள்ள இலேசியரோடு தொடர்புபடுத்தச் சிலர்முயன்றனர். இலேசியர் கிரீத்துத்தீவினின்றும் சென்றார்கள். கிரீத்து மக்களைப் போலவேஅவர்களும்தமிலே எனஅறியப்பட்டார்களென்பது சமாதிக்கற்களிற் பொறிக்கப்பட்ட சாசனங்கள் மூலம் அறியப்பட்டது. ஐசியன் தீவுமக்கள்நாகரிகத்தின் மேலெல்லை கி. மு. 2500. தமிழரின் நாகரிகம் இதற்குப் பல நூற்றாண்டுகள் அப்பாற்பட்டதென தொல்பொருளாராய்ச்சியைக் கொண்டு நிறுவலாம். இலேசியர் கிரேக்கரல்லர். அவர்கள் திரோசருக்கு [Trojans] இனமுடையவராகலாம். தமிழ்நாட்டினின்றும் வெளியேறிய ஒரு கூட்டத்தினர் ஆசியா மைனரில் குடியேறித் தமிலி என அறியப்பட்டார்கள்என்றுகூறலாம். இது, பிற்காலத் தமிழர் தென்னுபிரிக்கா, பர்மா மலாயா முதலியநாடுகளிற் குடியேறி வாழ்ந்ததுபோலாகும்.

இந்தியாவில், பழங்கற்காலம் முதல் இக்காலம் வரை தொடர்பாக மக்கள் வாழ்ந்து வருகிறார்களென்பதைத் தொல்பொருளாராய்ச்சி வலியுறுத்துகின்றது. திராவிடருக்கு முற்பட்டமக்கள் பழங்கற்காலப் பண்பாட்டைத் தொடக்கியவர்களெனவும் அவர்களுக்குப் பின் வந்தவர்கள் திராவிடரென்றும் ஒரு கொள்கை இருந்துவருகின்றது. காடுகளிலும் குன்றுகளிலும் வாழும் குறும்பர், இருளர், தோதர்,இலங்கை வேடர் திராவிடருக்கு முற்பட்டவர்களெனப்படுகின்றனர். தென்னிந்திய மக்களினங்களுள் நிகிரோயிட்டுக்கள் இருக்கிறார்களென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நிகிரோயிட்டு அல்லது ஆஸ்திரலோயிட்டுக்கலப்பு ஆஸ்திரேலியாவிலிருந்து வரவில்லை மலாயாவிலிருந்து வந்தது. இவர்களுக்கும் மலாயாவிலுள்ள சக்கையர்களுக்குமுள்ள தொடர்பை தேஸ்டன்காட்டியுள்ளார். வரலாற்றுக்கு முன்னிருந்து தென்னிந்திய மக்கள் மலேசியா, பொலினேசியா முதலிய நாடுகளோடு வாணிகம் நடத்தினார்கள். அக்காலத்தில் அந்நாட்டுமக்கள் தென்னிந்தியாவிற்குடியேறி உள்நாட்டு மக்களோடு கலந்தார்கள். மலாய் மொழியில் தென்னிந்திய மொழிச்சொற்கள் காணப்படுகின்றன. முற்காலத்தில் தென்னிந்தியர் பலர் மலேசியாவிலும் மலேசியர் தென்னிந்தியாவிலும் குடியேறினர்.

முண்டாமொழிக்கும் திராவிடமொழிக்கும் கலப்பிருப்பதால் இரு இன மொழிகளைப்பேசிய மக்களுக்கிடையில் கலப்பேற்பட்டதெனத் தெரிகிறது. முண்டாமொழிகளை வழங்கும் மக்கள் தென்னுட்டில் வாழ்ந்ததாக அறியப்படவில்லை. முண்டா மொழி வழக்கின் அடையாளங்கள் கோதாவரி எல்லைவரை காணப்படுகின்றன. முண்டா மொழியின் செல்வாக்குத் தென்னிந்தியாவிலிருந்ததாகக் காணப்படவில்லை.

வடக்கே பலுச்சித்தானத்தில் தமிழுக்கு இனமுடைய பிராகூய் மொழி காணப்படுகின்றது. இதனால் திராவிடர் வடமேற்கு எல்லைவழியாக இந்தியாவை அடைந்தார்கள் என்னும் கொள்கை எழுந்தது. பிராகூய் மக்கள் பலுச்சித்தானத்தில்எல்லாப் பகுதிகளிலும்காணப்படுகின்றனர். தாம் அலப்போவிலிருந்துவந்தவர்களாக அவர்களிடையேஐதீகம்இருந்துவருகிறது. இவர்கள் பலுச்சித்தானியா அல்லது பாதியரிலும்(பட்டாணி இனத்தால் வேறுபட்டவர்கள்.இவர்கள் வேளாண்மை செய்வோர். பிராகூய் மொழியில் ஆரியச் சொற்கலப்பு அதிகமிருந்த போதும் அது திராவிட மொழிபோல் தெரிகிறது. அது ஒட்டுச்சொற்களையுடையது.பெயர்ச்சொல்,தன்மை முன்னிலைப் பெயர்கள் திராவிடமொழிக்கிருப்பதைப் போலவே இருக்கின்றன. அம்மக்கள் திராவிடரைவிட ஈரானிய இனங்களைச்சேர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்களெனமக்களின் ஆராய்ச்சி வல்லார் கூறுகின்றனர். திராவிடரிலொருபிரிவினர் வடக்கு நோக்கியும் வடமேற்கு நோக்கியும் சென்று அங்கு குடியேறினார்களென்பதில் மறுப்பதற்கென்னவிருக்கிறது.

இராசபுத்தாஞ மத்திய இந்தியா முதலிய பகுதிகளில் வரலாற்றுக்குமுன்னிருந்து திராவிட கலப்பிருந்ததென்பது அவ்விடங்களில் திரவிடத்துக்கினமுடைய வில்லி சாந்தரல் முதலிய மொழிகள் காணப்படுவதாலறியலாம். மொகஞ்சதாரோவில் வழங்கிய மொழி திராவிடமாகலாம் ஐபிரத்து ஆற்றுவளைவிலுள்ள மித்தனி (Mitanni) நாட்டுமொழி திராவிட மொழிபோன்றது. அம்மொழியின் ஒலி, இலக்கணம், சொல் முதலியன கருத்திற் கொள்ளத்தக்கன. மித்தனிநாட்டரசர்கள்கி.மு 15-ம் நூற்றாண்டில் எகிப்தின்மீது தொடர்பாகப் படையெடுத்துச்சென்று எகிப்திய இராசகுமாரிகளை மணந்தார்கள். இவ்வகை உறவு ஈலம் (Elam) மக்களுக்கும் பிராகூய் மக்களுக்கும் இருந்திருக்கலாம். ஈலம் மக்களின் தாயகமே மித்தனி மக்களின் தாயகமுமாகும். சுமேரியம் ஒட்டுச்சொற்களுடைய மொழி. ஸ்கோனர் என்னும் சேர்மானியர் மெசபெதேமியாவிலும்ஈரானிலும் இடப்பெயர்கள், திராவிடமாகவிருப்பதைக் காட்டியுள்ளார்.

மெம்பிசில் எகிப்து) இந்தியக் குடியேற்றம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஊர் என்னும் பெயர் தமிழாகக் காணப்படுகின்றது.ஊர் என்பது தமிழில் பட்டினத்தையும் கிராமத்தையும் குறிக்கும். அங்கு வெள்ளப்பெருக்குக்கு முற்பட்ட மண்படைகளிற் கிடைக்கும் அமேசநைட் Amazonite) மணிகள் நீலகிரியிற் காணப்பட்டன. இவையெல்லாம் திராவிடரின் மத்திய தரைத்தொடக்கத்தைப்பற்றி என்ன கூறுகின்றன. இடம் பெயர்ந்து சென்றமக்கள் தம்மோடு மொழியையும் கொண்டு சென்றார்கள். தமிழர்மேற்கு ஆசியாலிலிருந்து வந்தவர்களா? உண்மை இதற்கு நேர்மாருனது:

தென்னிந்தியாவில் பழங்கற்காலத்திலிருந்து புதிய கற்காலம்வரையும் புதியகற்காலம் முதல் இருந்து இரும்புக்காலம்வரையுமுள்ளபண்பாடுகள் தொடர்பாகக் காணப்படுகின்றன. நாட்டுக்குரியவும் பழமையுடையவும்இப்பண்பாட்டைப்புதியவர்களாக வந்த (புதியவர்களாகக்கொள்ளப்பட்ட திராவிடர்களால் மறைக்கமுடியாது. இதற்கு விடைகூறும் கடுமையைத் தவிர்ப்பதற்கு திராவிடர் என்னும்கொள்கைகொண்டுவரப்பட்டது. இக்கொள்கையைப் போலவே திராவிடர் படையெடுப்பு என்பதும் ஆதாரமற்றது. பழந்தமிழர் என்போர் பழைய பண்பாடுத்தொடர்பில் தொடர்ந்து வருவோராவர்.

கன்னடம்,தெலுங்கு,துளு மலையாளம் முதலிய மொழிகளிலும் பார்க்கத் தமிழ் பழமையுடையது. ஏறக்குறையஆயிரம்ஆண்டுகளின் முன்,முன் கூறப்பட்ட மொழிகள் திருந்திய நிலையை அடைந்தன. அவை சமஸ்கிருதத்தின் செல்வாக்கைப் பெற்றுள்ளன. திராவிடம் என்பது தொடக்கத்தில் தமிழையும் பின் அதனையும் அதன் கிளைமொழிகளையும் குறிக்க வழங்கிய பெயர்.

புரூஸ்ஃபூட் (Bruce Foot) தாமிரபரணி ஆற்றின் தென் கரையிலுள்ள ஆதிச்ச நல்லூரில் 14 ஏக்கர் நிலப்பரப்பிற் கிடந்த ஈமத்தாழிப் பிணபுனப் புதையல்களைக் கண்டுபிடித்தார். இப்புதையல்கள் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து இரும்புக் காலத்தின் முற்பகுதிவரை உள்ளன. அன்னவாசல், புதுக்கோட்டை, பழநி, அண்ணமலை மலைத்தொடர், நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், வடஆற்காடு, தென் ஆற்காடு, அனந்தப்பூர், பெல்லாரி,குர்நூல் முதலிய இடங்களிலும் இவ்வகைத் தாழிப்புதையல்கள் காணப்பட்டன.

பழங்கற்காலமக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் தென்னிந்தியாவிற் கண்டுபிடிக்கப்பட்டன, பழங்கற்காலக் குடியிருப்புகள் கண்டுபிடிக்கப்படவில்லை. பழங் கற்கால ஆயுதங்கள் மிகுதியும் பளிங்குக் கற்களாற் செய்யப்பட்டவை. தென்னிந்தியாவில் பழங்கற்காலத்தின்பின் இரும்புக்காலம் தோன்றிற்று. இரும்புக்காலம் கி.மு. 4000 ஆண்டுவரையில் தோன்றியிருக்கலாம். கிறீத்தீவிலும் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து இரும்புக்காலம் இருந்தது. இந்தியாவில் கற்கால மக்கள் காட்டில் வாழவில்லை, மலைகளில் வாழ்ந்தார்கள். இரும்பு கண்டுபிடிக்கப்பட்டபின் அவர்கள் காட்டில் வாழ்ந்திருக்கவேண்டும். இரும்பின் உதவியின்றி அவர்களால் எப்படி மரங்களை வெட்டி வீழ்த்திக் காட்டை அழிக்க முடியும்?

இரும்புக்காலம், பண்பாடு வளர்ச்சியடைந்தபோது அவர்கள் கலப்பு லோகங்களைச் செய்யக் கற்றார்கள். இரும்புப் பொருள்களுக்குப் பக்கத்தில் பொன், வெண்கலம், செம்பு முதலியவற்றுற் செய்யப்பட்ட பழம் பொருள்களும் காணப்பட்டன. மட்பாண்டத்தொழில் பெருகியிருந்தது. இவை பெரும்பாலும் பிணப்புதையல்கள் பெருங்கல் நாட்டிய சமாதிக் குழிகளிற் காணப்பட்டன. புதிய கற்கால மட்பாண்டங்கள் மங்கிய நிறமுடையவை. இரும்புக்கால மட்பாண்டங்கள் துலக்கமான நிறமும் மினுமினுப்பான மேற்புறமுமுடையன. தென்னிந்திய மட்கலங்களில் மனித உருவங்கள் எழுதப்பட்டிருக்கவில்லை. நீலகிரி மட்பாண்டங்களில் மனித உருவங்கள் காணப்படுகின்றன. நீலகிரி மக்கள் தண்டு சக்கரங்களைப் பயன்படுத்தினர். மட்பாண்டங்களிற் பல எகிப்து, கிரீஸ், எற்றுஸ்கானிய மட்பாண்டங்களை ஒத்திருக்கின்றன. புதிய கற்காலச் சாடிகள் பல திராய் நகரிற் கிடைத்தவைபோலிருக்கின்றன. பல்லாவரத்தில் காணப்பட்ட ஈமத்தாழிகள் பாக்தாத் எற்றுஸ்கானியாவில் காணப்பட்ட பிணம்வைத்துப் புதைக்கும் மண் பேழைகளை ஒத்தவை.

வேணுட்டிலும் ஆதிசசநல்லூரிலும் ஈமத்தாழிப் புதையல்கள் சில காணப்பட்டன. இத்தாழிகள் முழுப்பிணத்தையும் வைக்கக்கூடிய பருமையுடையன. பிணத்தைச் சுடும் வழக்கத்தைக் காட்டும் சின்னங்கள்

[10-ம் பக்கம் பார்க்க]

## சிறுகதை (5ம் பக்கத் தொடர்ச்சி)

போது டாக்டர் ஆச்சரியப்படவில்லை.அந்தக் கிராமத்தில் அது சகஜம்.

விவசாயிகள் என்றாலும் ஒரு நேரக் கஞ்சிக்காகவும், துணிமணிக்காகவும் சதா போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்கள் அவ்வூர் மக்கள். அப்படியான வாழ்க்கைத் தரமுடையவர்களிடையே இப்படியானசம்பவங்கள் நடப்பது இயற்கையே. தூஷிப்பதும், அடிதடிப்படுவதும், வெட்டுக்குத்துப்படுவதும்அவ்வூரவர்களுக்கும், டாக்டர் சங்கரலிங்கத்திற்கும் இயற்கையாகி விட்டதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லையே!

கொண்டு வரப்பட்ட நோயாளிக்கு இரத்தம் ஏற்றவேண்டியிருந்தது.கூட வந்த இரண்டு மூன்றுபேரையும் திரும்பிப் பார்த்தார். அவர்களைப் பார்க்க மிகவும் பரிதாபமாயிருந்தது. உழைத்து உழைத்து ஓடாகிப் போயிருந்தார்கள். அவர்களைப் பார்த்த போது,சங்கரலிங்கத்திற்குத் தான் வைத்தியக் கல்லூரியில் படிக்கும் போது பார்த்த எலும்புக் கூடுகள் ஞாபகத்திற்கு வந்தன.இன்று விவசாயிகள் சீராக இயங்கினால் இங்கு குடி கொண்டிருக்கும் வறுமை,பிணி எல்லாமே தானாக நீங்கி விடும். அவர்கள் தாமே இந்நாட்டுக் 'காவற் தெய்வங்கள்'.

அப்பாற் சென்று தன்னுடைய இரத்தத்தையும், நோயாளியினுடைய இரத்தத்தையும் சோதித்துப் பார்த்து,அது பொருந்துவதைக் கண்ட டாக்டர் சங்கரலிங்கம் திரும்பிவந்தார். மெதுவாக உதவி டாக்டரிடம் சென்று ''என்னுடைய இரத்தத்தைஎடுத்துநோயாளிக்கு ஏற்றுங்கள்'' என்று சொன்னார்.

சிவசங்கரன் வாயடைத்து நின்றார்.

''நேரம் போகிறது'' என்று ஊக்கமூட்டினார், சங்கரலிங்கம். சிவசங்கரன் கூட வந்தவர்களை வெளியே அனுப்பி விட்டு இரத்தத்தை எடுக்கத் தொடங்கினார்.

எல்லாம் முடிந்த பின் நோயாளி எப்போது கண் விழிப்பார் என்றுசங்கரலிங்கம் காத்திருந்தார். அவருடைய 'இலட்சிய ஏக்கம்' சிறிது தணிந்திருந்தது. இந்தச் சமூகத்தின் ஆணிவேர்களாகிய விவசாயிகளில் ஒருவனைக் காப்பாற்றிவிட்ட மகிழ்ச்சியும், நிம்மதியும் கலந்த பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. ஆனல் சமுதாயத்தைத் தாங்கும் அந்த ஆணிவேர்களுக்கே, ஆணிவேராய் ஒன்று இருக்கிறதே அது என்ன? அது தான் குருதி.

[யாவும் கற்பனை]

''லேடன்''
LEYDEN
தயாரிப்புக்கள்
பெனியன்
ஸ்போட் சேட்
ரி சேட்
ரெறி சேட்
ரெறி பிளவுஸ்
பேபி வெஸ்ட்
கால் மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார சிறுகதை

# ஆணிவேர்

ச. சுப்பிரமணியம்

எங்கோ ஒரு சேவலின் நம்பிக்கையான குரல் கேட்டது. அதைத்தொடர்ந்து தூரத்தூர உள்ள சேவல்களின் ஒருமித்த குரல்கள் ஒளிர்வடைந்து தேய்கின்றன. வழக்கமான குரல்களென்றுலும், இன்று அவைகள் நீண்டகால ஏக்கக்கண்களால் கிரகிக்கப்படுகின்றன. ஏன் இந்த ஏக்கம்? பிறப்பது, இறப்பது, வாழ்வதுதானே. இல்லை. நாம் வாழ்க்கை என்று சுலபமாகச் சொல்லி விடுகிறேம். அதற்குள்தான் எத்தனை கோடி நிகழ்ச்சிகள். 'ஒவ்வொரு மனிதனுக்கும் பல இலட்சியங்கள் இருக்கின்றன. ஆனுல் அவையெல்லாம் ஒரேயொரு அடிப்படை இலட்சிய ஆணிவேரின் கிளைவேர்களே. மனித வாழ்க்கையையே கட்டி எழுப்புவதற்காகத்தான் இந்தக் கோடி நிகழ்ச்சிகளும்.'

உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதாவது செய்துவிட வேண்டுமென்று துடிக்கிருன். செய்தும் விடுகிருன். தான் செய்வது சமூகத்துக்கு நன்மையளிப்பதா அல்லது தீமையளிப்பதா என்பதுபற்றி அவன் சிந்திப்பதே இல்லை. காரணம் போட்டி, பொருமை முதலியவற்ருல் தலைமை தாங்கப்படும் நிகழ்ச்சிகளால் அவர்கள் வேகமாகத் தள்ளப்படுகிருர்கள். எதிர் நீச்சலடிக்க அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் விளம்பரத்தால் உயர்வடையலாம் என்ற எண்ணமுடையவர்கள். ஆனுல் அது நிரந்தரமாகாது என்பது அவர்களுக்குப் புரிவதில்லை.

அந்தச் சிறுவைத்தியசாலையின் சொந்தக்காரரான டாக்டர் சங்கரலிங்கம் மெதுவாகக் கண்களைத் திறந்து யன்னலூடாகக் கிழக்கு வானத்தை நோக்கினுர். அது குருதி நிறத்தில் சிவந்திருந்தது. வழக்கமாக வேளைக்கு எழுந்துவிடும் அவருக்கு இன்று ஏனே எழுந்திருக்க மனம் வரவில்லை. அவருடைய மனம் எதையெதையோவெல்லாம் சிந்தித்தது. 'துன்பம், ஏக்கம், சந்தோஷம் இவைகளால் மனம் அலங்கரிக்கப்படும்போது அது செயலற்று விடுகிறது' என்ற யாருடையதோ ஒரு தத்துவம் மனதில் பளிச்சிட்டது. ஆனுல் அது எப்போது யாரால் சொல்லப்பட்டது என்று அவருக்கு ஞாபகம் வரவில்லை. ஆனுல் எதுஎப்படியானுலும், ஒன்றை மட்டும் அவரால் பூரணமாக உணர முடிந்தது. தானும் குறிப்பிட்ட அந்தநிலைக்கு வந்துவிட்டதை அவர் உணர்ந்தார். 'தனக்கு ஏற்பட்ட இந்த ஏக்கம், துக்கம் எல்லாம் நிவர்த்திசெய்யப்படும்போது அது சந்தோஷத்திற்கு ஏணியாக அமைகிறது. ஆனுல் அது சுயநலத்தின் மூலமல்ல.'

சோம்பலை ஒருமாதிரியாகப் போக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து இரு கைகளையும் ஒன்றுடன் ஒன்று உரசினுர். உடலில்சூடுஏறிய பின் மெதுவாக எழுந்து நோயாளிகள் வந்து இருப்பதற்காக விருந்தையில் போடப்பட்டிருக்கும் கதிரைகளில் ஒன்றில் போய் அமர்ந்தார். அந்தச் சிறு வைத்தியசாலையைத் தழுவி வடிந்து பின் புற்காடுக்கு மகுடமமைத்துநின்ற பனித்துளிமீது செங்கதிர்ச் செல்வன் தூவிய பொன்துகள்கள் விழுந்தபோது அவை பளபளத்தன. ''வாழ்க்கையும் இப்படித்தானு?'' என்ஞெரு எண்ணம் சங்கரலிங்கத்தின் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தபோது, அவர் அதற்கு அப்படியே சமாதி கட்டிவிட்டு வேறுபுறம் மனத்தைத்திருப்பிக்கொண்டார்.

வைத்தியசாலையின் முன்புறம் நின்ற சூரியகாந்திச் செடி அவரின் கவனத்தை ஈர்ந்தபொழுது அவரின்மனதுக்குள் வசந்தமான கற்பனைப் பிரவாகம் ஊற்றெடுத்தது. 'காதலனின் வருகையால் தன் சுய எண்ணங்களிலிருந்து விடுபட்டு, அவனுடன் ஒன்றிக்கலக்கும் மங்கையொருத்திபோன்று இந்தச் சூரியகாந்திமலரும் சூரியனின் வருகையால் எவ்வளவு மென்மையாகத் தன்னிடமிருந்துஇதழ்களை விடுவிக்கின்றது. உலகத்தின் விழிப்பு அதற்கும் விழிப்புத்தானே? ஆனுலும் அந்த மலரிடம் ஏதோ ஒரு ஏக்கம் இருப்பதுபோல அவருக்குத் தோன்றியது. அந்த மலர் சூரியனை நோக்கி ஏக்கப்பாடல் ஒன்று பாடுவதுபோல் தன் மனதுக்குள் ஒரு கவி பாடினுர் டாக்டர்.

பொன்மணித் தேரேறி  
பொழுது சாயும்வரை  
பெண்மலர் என் உளத்தை  
இழுத்துச் செல்வாயே!  
கண்ணில் கலக்கமதை  
கண்ணெடுத்தும் பாராமல்  
கனவுலகை எனக்கிங்கு  
விட்டுச் செல்வாயே!

இந்தக் கவியை ஏதாவது ஒரு பத்திரிகையில் அவர் எழுதியிருந்தால், டாக்டர் கவி எழுதுகிருரே என்றுஆச்சரியப் பட்டிருப்பார்கள் எத்தனையோ பேர். ஆனுல் டாக்டரின் உண்மையான உள்ளத்தைத் தெரிந்துகொண்டவர்கள் அவருடைய கவிக்கு ஆச்சரியப்படவரமாட்டார்கள். 'டாக்டர், டாக்டராகவும், ஆசிரியன், ஆசிரியனுகவும் இருந்துவிட்டால், சமூகத்தைப் புரிந்துகொள்ள முடியாது. காரணம் சமூகம் ஒரு 'மனேரஞ்சிதமலர்.'

புத்தகத்தில் படிக்கும் இறந்த காலமும், வருங்காலமும், நிகழ்காலத்தை நிர்ணயிப்பதில்லையென்று டாக்டருக்குத் தெரியும். இந்தச்சூரியகாந்திச் செடி எவ்வாறு ஓர் ஆணிவேரினுல் உறுதியாக நிமிர்ந்து நிற்கின்றதோ அதே போலத்தான் இந்தச் சமுதாயமும் ஏதோ ஓர் உறுதிமிக்கஆணிவேரில் தங்கியிருக்கிறது என்பதை இந்தச் சமூகத்தில் வாழ்பவர்கள் எவருமே மறுத்துரைக்க மாட்டார்கள். சங்கரலிங்கம் டாக்டரை ஒரு சில நோய்களின் மருத்துவன் என்று சொல்வதைவிட ஒரு சமூகத்தின் மருத்துவன் என்று சொல்வது மிகவும் பொருத்தம். அவர் ஒரு டாக்டர்மட்டுமல்ல. ஒருகவிஞன், ஒரு அரசியல் ஞானி. இப்படி இன்னும் எத்தனையோ பெயர்களால் அவரை அலங்கரிக்கலாம். ஆனுல் அவர் இதையெல்லாம் விரும்புவதில்லை.

அவரைப்பொறுத்தவரை சமூகத்தின் நன்மைக்காகத் தன்னையே அர்ப்பணிக்க விரும்புபவர். அவர் தன்னிடம் வரும் நோயாளிகளிடம் அடிக்கடிசொல்லுவார்:

'நாம் சும்மா பிறந்துவாழ்ந்துஇறந்தால்போதாது. சுயநலமற்ற வாழ்க்கை வேண்டும். அப்பொழுதுதான் சமூகத்தில் எந்தவிதமான அனர்த்தங்களும் விளையமாட்டா. அப்பொழுதுதான் மனிதன் மனிதனுக வாழத் தொடங்குகின்ருன்'

அவர் சொல்வதைக் காதில்வாங்கிக்கொள்வோர் சிலர், வாங்கிக் கொள்ளாதோர் சிலர். எப்படியானுலும் அவர் சொல்வது முற்றிலும் உண்மை என்பது சற்றும் பிழையாகாது.

டாக்டர் காலைக் கடன்களெல்லாவற்றையும் முடித்துக் கொண்டு நோயாளிகளைப் பார்வையிடும் அறையில் வந்து உட்கார்ந்தார். ஒன்றிரண்டு நோயாளிகளைப் பார்வையிட்ட பின்னர் அவருடைய உதவி டாக்டர் சிவசங்கரன் காலை வந்தனத்துடன்வந்தமர்ந்தார். தினம் சிவசங்கரன் 'லேட்'டாகத்தான்வருவார். ஆனுல் சங்கரலிங்கம் கண்டிப்பதில்லை. நிறையப் பிள்ளைகள் பெற்றவர். பெண் சாதி ஒரு நோயாளி. பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டியதெல்லாம் செய்து, பெண்சாதிக்குச் செய்ய வேண்டியதெல்லாம் செய்த பின்னரே அவர் வருவார். இந்தப் பரிதாப நிலையைக் கண்டு சங்கரலிங்கம் ஒன்றுமே பேசுவதில்லை. 'கடமையென்பது சட்டத்தின் கூட்டுக்குள் அடைபட்டாலும், மனித சமுதாயத்துக்குச் சாதகமற்ற கடமை சட்டத்தைக் கோணலாக்காமல் விடாது' என்பது சங்கரலிங்கம் டாக்டரின் ஆராய்ச்சியில் முளைவிட்ட உண்மை.

தன்னைக் காணவரும் நோயாளிகளுடனே அல்லது பொதுமக்களிடமோ அவர்களுக்குச் சௌகரியம் அளிக்கும் வகையில் தான் இதுவரை சங்கரலிங்கம் நடந்து வந்திருக்கின்ருர். நடக்கின்ருர். ஆனுலும் அவரின் மனதுக்குள் ஒரு பெரிய இலட்சிய ஏக்கம். 'காதலினுல் ஏற்படும் ஏக்கம் தான்இந்தஉலகத்தில் மிகப்பெரிய ஏக்கம்' என்று சொல்லுவார்கள். அது உணர்ச்சியால் ஏற்படுவது. ஆனுல் அதையும் கூட மீறுமளவுக்கு சங்கரலிங்கத்தின் 'இலட்சிய தாகம்' ஏக்கமாக முதிர்ந்து விட்டது. ஆனுலும் காலத்தால் அந்த ஏக்கம் இதயத்தில் இருந்து கழுவப்படும் என்றஅசைக்க முடியாத உறுதியுடன்சங்கரலிங்கம் காலத்தை நோக்கி நின்ருர். சமூகசேவைக்காக முப்பது வயதாகியும் கூடக் கலியாணம் செய்யாமலே இருந்தார்.

ஒரு நோயாளியைப் பரிசோதித்து அனுப்பிவிட்டுச் சங்கரலிங்கம் திரும்பிய போது''ஐயா''என்ற குரல் கேட்டது. சங்கரலிங்கம் திரும்பி''என்னவிஷயம்'' என்று கேட்டார்.

''ஒரு அவசரமான கேஸ் ஐயா''என்று நடுங்கிக் கொண்டே சொன்னுன்.

''அவசரமான கேஸா? நோயாளியைக் கொண்டு வந்திருக்கிறிங்களா? உடனே உள்ளே கொண்டு வாருங்கள்'' என்று சங்கரலிங்கம் அவசரப்படுத்தினுர்.

உடனே நோயாளியை உள்ளே கொண்டு வந்தார்கள். நோயாளியைக் கண்டதும் டாக்டர்கள் இருவரும் திகைத்துப் போயினர். நோயாளியின் உடல், உடைகள் எல்லாம் ஒரே இரத்தமாக இருந்தது. முகத்தைப் பார்த்தார். அவன்சுயநினைவு இல்லாமல் கிடந்தான். அவனை அவருக்குத்தெரியும். அவன் அந்த ஊர் விவசாயிகளில் ஒருவன். கூடவந்தவர்களும் விவசாயிகளே. டாக்டர்கள் இருவரும் உடனடியாகச் செய்ய வேண்டியஎல்லாவற்றையும் செய்தனர். அதிக இரத்தம் வெளியே போயிருந்தது. காயப்பட்டதின் காரணத்தை அறிந்த

(4-ம் பக்கம் பார்க்க]

## சிந்தனைச் சித்திரம்

# வாழ்வு உயர

சவிரி குணரத்தினம்

'அவன் கூறியது உண்மைதானே?' என் மனம் அந்த இளைஞன் கூறியதையே அசைபோட்டுக் கொண்டிருந்தது.

'வாழ்க்கையில் கல்லூரிப் படிப்பு மட்டுமிருந்தால் தான்முன்னேறலாமா ஐயா? கல்லூரியை மிதிக்காத மற்றவர்கள் முன்னேறமுடியாதா? இன்று நான் இந்த நெல்மூட்டை தூக்கி வாழ்கிறேன். நாளை இதே நெல் மூட்டைகளை மற்றவர்களுக்கு இனுமாக வாரிவழங்கும் அளவிற்கு வாழ்க்கையில் முன்னேறமாட்டேனு? முன்னேறவேண்டும் என்ற மனமே ஒருவனை வாழ்க்கையில் முன்னேற்றிவிடும் ஐயா! கல்வி என்பது முன்னேற்றத்திற்கு ஓர் ஊன்றுகோல்தான்.'

உணர்ச்சியுள்ள இளைஞன் அவன். நிச்சயமாக வாழ்க்கையில் உயர்ந்துவிடுவான். அவனைத் தட்டிக் கொடுத்தவாறே அப்பால் நகர்ந்து வந்துவிட்டேன்.

அவன் கூறியதில் தவறு இருக்கிறதென்ருல் இன்று செல்வந்தர்களாக இருக்கும் பலரின் வாழ்க்கையிலும் தவறு ஏற்பட்டு விட்டது என்றுதானே கூறவேண்டும்?

செல்வந்தர்கள் எல்லோருமே கற்ருேர்தானு? பள்ளியையே மிதிக்காதவர்கள் எத்தனையோ பேர் பலரறிய செல்வந்தர்களாக இருக்கிருர்கள். அவனின் உள்ளத்திலெழுந்த அத்தீ என் உள்ளத்திலும் பற்றிக்கொண்டது. ஆனுல் அதற்குள் ஓர் எதிர்ப்பு! செல்வந்தர்களிற் பலர் படிக்காதவர்களென்ருல், ஏழைகளாக இருப்பவர்கள் படித்தவர்களா? வறுமையில் வாழ்பவர்கள் கற்ருேரா? எல்லோரும் அப்படியில்லையே! அவர்களின் ஏழ்மைக்குக் காரணமே கல்வி இன்மைதானே? கல்வியறிவு இல்லாமலும் வாழ்க்கையில் உயர்ந்து விடலாமென்ருல் அவர்களிற் பலர் முன்னேருததற்குக் காரணம்? ஒருவேளை அவன் கூறியதுபோறு 'முன்னேறவேண்டும் என்ற அந்த விடாமனம்' இல்லை என்பதனுலோ?

நெல்மூட்டை தூக்கும் அந்தத் துடிப்புமிக்க இளைஞனைப் பார்த்து இதற்கு விடைகேட்போமே என்று திரும்பி அவனைத் தேடினேன். ஆனுல் ஜனநெருக்கடியில் அவன் எங்கோ மறைந்துவிட்டான்.

மீண்டும் அவனது சொற்கள் என் உள்ளத்தைக் கொம்பாகப் பற்றிப்பிடித்து விட்டன.

''படித்தவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் முன்னேறி விடுவதில்லை. அதற்காகப் படியாதவர்கள் எல்லோருமே வாழ்க்கையில் பின் தங்கி விடுவதுமில்லை.'' கல்வி கற்காதவர்களில் ஒரு சிலருக்கு முன்னேறக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் [illegible] களுக்கும் ஏன் கிடைப்பதில்லை?

சிந்தித்தபடியே துறைமுகத்தை விட்டு வெளியேறிய எனக்கு முன்பாக யாரோ ஓர் இளமங்கை சென்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்து மரநிழலில் அமர்ந்திருந்த இளைஞர்களில் ஒருவன் - அவன் வண்டியோட்டியாக இருக்கவேண்டும். அப்படித்தான் தோற்றமளித்தான் - கேலி செய்தான். அதைப்பார்த்துக் கொண்டிருந்த அவன் நண்பர்களும் நகைத்தார்கள். நகைக்கும் அவர்களைப் பார்வையால் சுட்டெரித்துக் கொண்டே தன் வழி செல்கிருள் அம்மங்கை.

கேலி செய்த அந்த இளைஞனை நான் பார்த்தேன். 'மூட்டை தூக்கும் அந்தத் துடிப்புள்ள இளைஞனின்' கண்களில் கண்ட ஒளியை இவனிடம் நான்காணமுடியவில்லை. அவனைவிட இவனுக்குச் சுருள் முடியான தலை. அவனைவிட இவன் சற்று உயரத்திலும் வளர்ந்திருந்தான். ஆனுல் அந்தத் துடிப்புள்ள இளைஞனின் மனதைவிட இவன்மனம் உயர்ந்திருக்கவில்லை என்றே எனக்குத் தோன்றியது. அந்த வண்டியோட்டும் இளைஞனின் சமீபத்தில் சென்று ''இங்கே வா தம்பி'' என்றேன்.

''என்ன பெரியவரே'' என்றவாறே அவன் என்னிடம் வந்தான்.

''தம்பி, கோபிக்காதே. இதோ பார், நீஇப்பொழுது கேலி செய்தாயே அந்தப் பெண்ணைப் பார்த்து, அதனுல் உனக்கு ஏதாவது நன்மையுண்டா?''

அவன் சிறிதுநேரம் பேசாமல் நின்ருன். நேரடியாக நான் அக்கேள்வியைக் கேட்டது அவனைக் கலங்கவைத்து விட்டது.

''என்ன பெரியவரே, உமக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? உம்முடைய வேலையைப் பார்த்துக்கொண்டு செல்லும்'' என்று படபடப்புடன் கூறினுன்.

அவனது மனப்பண்பை அவனிடம் இருந்து வந்த வாய்ச்சொற்கள் எனக்குக் காட்டின.

''கோபிக்காதே தம்பி, நான் யாரோ அவன் யாரோதான். ஆனுல் நீ இந்த வயதிலே இப்படியெல்லாம் புரிகிருயே. உனக்கு உன் வாழ்க்கையில் முன்னேற விருப்பம் இல்லையா? எப்பொழுதுமேஇந்த வண்டிலைத்தான் ஓட்டிவாழ விரும்புகிருயா?'' - எனது கேள்வி அவனது மனதைச் சுட்டுவிட்டது என்றுதான் கூறவேண்டும். அவனது முகம் அதைக் காட்டியது.

''ஐயா, இந்த வயதில் இந்த உணர்ச்சிகள் இல்லாமல் எப்பொழுதுதான் தேவை என்கிறீர்கள்? தன்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் மறக்காத கவிஞன்

சு. சண்முகம் எம். ஏ.

1921 செப்டம்பர் 12-ம் நாள் திங்களன்று மீண்டும் பணிபுரிய வந்துவிடுவதாக சுதேசமித்திரனுக்குச்செய்தி அனுப்பினர் பாரதியார். ஆயின், அன்றைய சுதேச மித்திரன் தமிழகத்திற்குத் தந்த செய்தி இது:

''தமிழ்நாடு போற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நேற்றிரவு துறந்து, விண்ணவருக்கு விருந்தாகிவிட்டார், என்ற செய்தியை அறிவிக்க நமது மனம் பதறுகிறது, சில தினங்களாக நோயினல் வருந்திக்கொண்டிருந்த அவரை மறுபடியும் ஸ்தூல சரீரத்தில் பார்க்கப்போகிறது இல்லை என்று நாம் நினைக்கவில்லை ... என்ன கொடுமை.'' [பாரதி தமிழ்-பக்கம் 57.]

''காலா உனை நான் சிறு
புல்லென மதிக்கிறேன்
என்றன்
காலருகே வாடா, சற்றே
உனை மிதிக்கிறேன்''

என்ற கவிஞர் காலமெலாம் வாழும் நிலைபெற்றாலும் அவரது பொன்னுடலை அன்று மூண்ட தீ புடமிட்டு விட்டது.

பெருங்கவிஞர் மறைந்த அன்று, அவர் வீட்டிற்கு வேண்டுமெனவிட்டுப்போன சொத்துக்கள் ஏதும் இல. சடங்குகளுக்கானசெலவைக் கூட அவரது நண்பர் துரைசாமிஐயரவர்களே தரநேரிட்டது.

ஆனல் நாட்டுக்கென வைத்துப்போன சொத்துக்கள் 'பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலமெலாம்' புலவர்களிடத்தும் பொதுமக்களிடத்தும் என்றும் வாழ்வன.

வள்ளுவனுக்குப்பின், பல துறைகள் பற்றிப்பேசியவர் பாரதியாரே! வாழ்க்கையின் பல கோணங்களையும் தொட்டுப்பார்த்து, வையகம் மட்டுமன்று, வானம் அளந்தது அனைத்தும் அறிந்து, மனிதன் வாழ்வாங்கு வாழ வகை சொன்ன கவிஞர் அவரே!

பாரதியாரின்புனித உடலை அன்று சுமந்து செல்லும் பேறுபெற்றவர்கள் அவரது நண்பர்களே! [நெல்லையப்பர், இலட்சுமண அய்யர், அரிகரசர்மா, சுரேந்திரநாத் ஆர்யா.] ஆயின் இன்று அவர் தம் புகழைத் தமிழர்களாகிய நாம் எட்டுத்திக்கும் சுமந்துசெல்கின்ருேம். பாரதியார் மறைந்த அன்று அவரது உடலத்தின் பின் சென்ருேர் தொகை, இருபது கூட இருக்காது என்பதனை அறியும்போது மனம் வேதனைப்படுகிறது. பெருங் கவிஞனின் கடை நாள் வாழ்வு, இதுதான என பெருமூச்சுவிடுகிருேம். ஆனல் இன்று அக்கவிஞனின் பெயரால், எத்தனை விழாக்கள், மண்டபங்கள், எழுத்தோவியங்கள், மன்றங்கள். இதை எண்ணும்போது நாம் இறும்பூது எய்துகிருேம்.

''ஒருகவிஞனைப்பற்றி முழுமையாக அறிந்து பாராட்டக் குறைந்தது நூறுண்டு செல்லும்'' என்பர் ஆங்கிலேயர். அக்குறை நமது கவிஞருக்கு இல்லை. அவரது வறுமையைப்பற்றி வெளியுலகு அவ்வளவாக அறியாது போயினும், அவரது பெருமையை அவர் காலத்தார் அறிந்துகொள்ளாமலில்லை. திலகர், அரவிந்தர் போன்ற அரசியல்ஆத்மீகஞானியரும் வ. உ.சி., வ.வே.சு. அய்யர் போன்ற புலவர் பெருமக்களும், சர்க்கரைச் செட்டியார், துரைசாமி அய்யர் போன்ற அறிஞர்களும், நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ளபொதுமக்களும்அவர் காலத்தேயே அவரை வியந்துபாராட்டினர். அவர்களாலியன்ற உதவியும்செய்தனர். அவரோடு கலந்து பழகும் வாய்ப்புப்பெற்று, அவரது அன்பில் கட்டுப்பட்டுக் கள்வெறிகொண்டிருந்த காளையர் சிலர் அவரோடு வாழ்ந்த நாட்களின் நினைவலைகளைச் சொல்லில் வடித்துச் சுவையூட்டியுள்ளனர். [வ.ரா., கனகலிங்கம், கனக சுப்புரத்தினம், பி. ஸ்ரீ.]



அவரது வரலாற்று நிகழ்ச்சிகள், தம்பியும், மனைவியும், மகளும், வளர்ப்புப்பிள்ளையும்கூட எழுதும் வாய்ப்புப் பெற்றுத் திகழ்கின்றன. [விசுவநாதன், செல்லம்மாள் பாரதி, தங்கம்மாள் பாரதி, யதுகிரி அம்மாள்.] எட்ட இருந்த ஒரு சில அறிஞர்களையும் பாரதியின் வாழ்வுதொட்டுப் பேசச் செய்துள்ளது. [ஆக்கூர் அனந்தாச்சாரியார், இராமானுசலுநாயுடு, சுத்தானந்த பாரதியார், வையாபுரிப் பிள்ளை போன்ருேர்.]

அவரது படைப்புக்களைத் துருவி ஆராய்ந்து, மேலும் ஆய்வார்க்குத் துணையாகச் சேர்த்து உதவிய உழைப்பாளர் இருவர். [ரா. அ. பத்மநாபன், பெ. தூரன்]

பாரதியின் பெருமைகளைப் பட்டி தொட்டிகளில் எல்லாம் பறையறைந்தவர் இருவர். [ம. பொ. சி., 'ஜீவா.'] 'பாரதிஉலகம்' இப்பெரியார்களுக்கெல்லாம் என்றென்றும் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டுள்ளது.

கவிஞரைப்பற்றி இன்று பேசுவோர் கணக்கிலர். எழுதுவோர் எண்ணிலர். ஆயினும் எத்தனை முறை எழுதினும் எத்தனை வகையாகப்பேசினும், கவிஞரின் வாழ்வும், அவர்தந்த கலைச் செல்வங்களும் இனிப்பூறும் கனியாகச் சுவைக்கின்றன. அவ்வின்பச்சுவை நுகர நமக்குமட்டும் தடையா என்ன? வாருங்கள், திருநெல்வேலிச் சீமைக்குச் செல்வாம். [வளரும்]

# அன்புள்ள சரஸ்,

பல வருடங்களுக்...
பின் என் சொப்பன...
நீ வந்தாய். பல பல...
விகளைக் கேட்ட...
''கொழும்புப் பேப்ப...
எழுதிவந்த யாத்தி...
கடிதங்களை ஏனப்பா...
த்திவிட்டாய்? மீண்...
தொடர்ந்து எழுது.
அனுபவங்களையெல்ல...
கேட்கவேண்டும்போல்...
ளது. எழுதுகிருயா?'' எ...
கேட்டாய். பன்முறை...
சொப்பனத்தில் வந்து...
படிக் கேட்டதும், அ...
தங்களைத் தொட...
எழுதவேண்டியதே எ...
எண்ணினேன்.

ஆனல் ஒருவித தய...
ஏற்பட்டது, என்ன...
யுமா? யாத்திரையோ...
கம் செய்யவில்லை. எ...
எழுதுவது? இதைப்ப...
யோசித்தேன். ஓர்...
ணம் உதித்தது. ...
வாழ்க்கையே ஒரு நீ...
யாத்திரை. எப்போது...
ஆரம்பித்தது, எப்பே...
இது முடியும் என்பது...
குத் தெரியாது. இந்த...
திரையில் எவ்வளவோ...
பவங்கள், அதுவும் பே...
காரன் என்ற முறை...
சென்ற சுமார் 40 வரு...
களிலே ஏற்பட்டுள்ள...
பவங்கள் கொஞ்சம...
''இந்த வேலையில்...
சேர்ந்தாய்? எப்ப...
சேர்ந்தாய்? என்னெ...
பேப்பரில் இதுவரை தெ...
டாற்றினய்?'' என்...
லாம் நீ உயிருடன் இ...
கும்போது கேட்பது...
அதையெல்லாம் அப்பே...
உனக்குச் சொல்ல மு...
வில்லை. அப்போது சொ...
முடியாததை இக்கடித...
மூலம் தெரிவிக்கிறே...
சரியா?

கடைசியாக உனக்கு...
தியது எட்டு வருடங்கள...
முன்பு. அந்தப் பல...
பத்திரிகையைப் புரட்...
பார்த்தேன். அக்கடிதத்...
முடித்திருந்தவிதம் எனக்...
வியப்பளித்தது. பி...
பைன்ஸ் நாட்டி...
பாகியோ எனுமிடத்...

# தமிழரின் கல்விக்கு மறைமுக ஆபத்து!

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை வரண்டபிரதேசம்என்றழைப்பதுண்டு. இவ்விடங்களில் மழைக் குறைவே இதற்குக் காரணம். இலங்கையின் ஏனைய பகுதிகளில் தாராளமான மழை பெய்வதால் நிலம் எப்பொழுதும் பச்சைப் பசேல் என்றுசெல்வம் கொழித்துக் கொண்டிருக்கும். அங்குள்ள மக்கள் தேயிலையையும், தென்னையையும், ரப்பரையும், கொக்கோவையும், வாழையையும் கமுகையும் வளர்த்து கஷ்டமில்லாமல் வயிறு கழுவமுடிகிறது.

அப்படியன்று வரண்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு. இவர்கள்வாழ்க்கைப் போராட்டத்தில் முன்னேறுவதற்கு பெரும்பாலும் தங்கள் மூளையையே நம்பியிருக்கிருர்கள். மூளையை வளர்ப்பதற்கு முறையான, திறமான கல்வி வசதிகள் வேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்தே முன்னுள்ளவர்கள் ஊரிலுள்ள தனவான்களையும், காருண்ய சீலர்களையும், சீர்திருத்தவாதிகளையும் ஒன்றுகூட்டி அவர்களின் உதவியோடு பல பாடசாலைகளையும், கல்லூரிகளையும் நிறுவினர்கள். இக்கல்வி நிலையங்கள் திறம்பட நடைபெறுவதற்கு தர்ம சாதனங்களையும் எழுதிவைத்தனர்.

தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியூட்டி அவர்கள் பிற்காலத்தில் சிறந்து வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் பெற்ருேர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து ஒத்துழைத்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், குறிப்பிட்டுக் கூறுமிடத்து, மூலைக்கு மூலை, வீதிக்கு வீதி பாடசாலைகளும், கல்லூரிகளும் எழுந்தன. சனத்தொகை வாரியாகவும் பிரதேச வாரியாகவும் பார்க்கும்போது கொழும்பு மாவட்டத்தை விட யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகமான கல்வி நிலையங்களிருந்தன.

## திட்டமிட்ட சதி நடக்கிறதா?

அவற்றில் கல்வி பயின்ற நமது இளைஞர்கள் அரசாங்கத்துறையிலும், வர்த்தகத் துறையிலும், சட்டம், வைத்தியம் முதலிய துறைகளிலும் முன்னணியில் நின்று விளங்கினர்கள்.

இன்று இந்த நிலைமை மெதுவாக, ஆனல் நிச்சயமாக மாறி வருகிறது. இல்லை, மாற்றப்படுகிறது. தமிழ் மாணவர்களுக்கு முன்போல உயர்தரக்கல்வி கிடைக்காமலிருக்கும்பொருட்டு முன் யோசனையுடன் திட்டமிடப்பட்ட ஒரு சதி உருவாகி வருகின்றது.

1960-ம் ஆண்டு அரசாங்கம் இலங்கையிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களையும் எடுத்துக் கொண்டது. ஆசிரியர்கள் எல்லோரும் அரசாங்க ஊழியர்களானர்கள். தனித்து நின்று இயங்கக்கூடிய பொருளாதார பலமுள்ள மிகச்சில பள்ளிக்கூடங்களே இந்தத் திட்டத்தில் சேரமறுத்து தனியார் ஸ்தாபனங்களாகவே இயங்குகின்றன. ஆனல் இப்பள்ளிக்கூடங்களுக்கு முன்போல அரசாங்கம் கொடுத்துவந்த உதவிப் பணம் நிறுத்தப்பட்டது.

அரசாங்கத்திடம் பள்ளிக்கூடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டமையால் அரசாங்கமே எல்லா அலுவல்களையும் கவனித்துக் கொள்ளட்டும் என்று பெற்ருேரும், பொது மக்களும் வாளாவிருந்து விட்டனர். ஊரவர்களின் ஆதரவோடு பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வந்தபோது அவர்கள் காட்டிய அக்கறை இப்போது மறைந்து விட்டது.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள அரசாங்கப் பள்ளிக்கூடங்களுக்குத்தேவையான உபகரணங்கள் நேரத்திற்கு வந்து சேருவதில்லை. உயர்தர விஞ்ஞான வகுப்புகளுக்கு ரசாயனப் பொருட்களும், செயல் முறையில் செய்து காட்டுவதற்கு உதவும் கருவிகளும், தளபாடங்களும் அத்தியாவசியமானவை. இவையில்லாமல் மாணவர்கள் விஞ்ஞான பாடங்களில் தேறுவது மிகவும் கடினம்.

இப்பொருட்களை வேண்டுமென்றே தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பாமல் விட்டுவிடுகிருர்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்நிலையில் ஆசிரியர் சுமார் 50 கேள்விகளுக்கு தக்க விடைகளைச் சொல்லிக் கொடுத்து விட்டு தமது கடமையை முடித்துக் கொள்கிருர். மாணவன் ஜி.சி.ஈ. முதலிய உயர்வகுப்புகளுக்குப் பரீட்சை எழுதும்போது, தான் மனப்பாடம் செய்துகொண்ட கேள்விகளைக் காணமல் மலைத்துப் போய் பரீட்சையில் கோட்டை விட்டுவிடுகிருன்.

இன்னுமொரு சூழ்ச்சி நடக்கிறது.

ஒரு பாடசாலையில் அனுபவம் முதிர்ந்த கெட்டிக்காரத்தனமான விஞ்ஞான ஆசிரியர் இருக்கிருராக்கும். அவருடைய மாணவர்கள் பரீட்சையில் கூடுதலான புள்ளிகள் வாங்குவது இயற்கைதானே? இதை மேலிடங்கள் கவனித்து விடுகின்றன. திடீரென்று அவ்வாசிரியருக்கு மாறுதல் கடிதம் வந்து விடுகிறது.

நமது இளைஞர்களின் கல்வியிலும், வருங்காலத்திலும், முன்னேற்றத்திலும் சிரத்தையுள்ள பெற்ருேர்களும், கல்விக்கழகங்களும், நாட்டிலுள்ள பெரியோர்களும், நமது அரசியல் தலைவர்களும் இவ்விஷயங்களை நன்ருக ஆராய்ந்து ஆவன செய்யாவிடில் ஒரு காலத்தில் கல்வியறிவுக்குப் பேர் போன தமிழர்கள் வெகு சீக்கிரத்தில் மட்டரக மடையர்களாகி விடுவார்கள்.

—சட்டம்பியார்

## 'தடிமல்' பெண்ணே வரவேண்டாம்

அன்பின் கண்ணே வரவேண்டாம்
ஆறுத்தொல்லை தர வேண்டாம்
துன்பம் தன்னை மையாகத்
தோய்த்தே இதனை எழுதுகிறேன்.

கன்னம் இரண்டும் உனைவைத்துக்
காதல் செய்த சிறுவயதை
இன்னும் நினைத்து வருகின்ருய்
எந்தன் கண்ணே! பொறுத்திருப்பாய்.

''பனியின் காலம் நான்வந்து
பார்த்துச் செல்லா ததைவிடுத்து
உனை நான் என்று காண்பதெ''ன
உரைசொல் பெண்ணே உனக்கொன்று.

சுற்றித் திரிந்தேன் கடைவீதி
சொர்ணப் பெண்ணே மல்லியில்லை
சற்றுப் பொறுப்பாய் என்அன்பே
'தடிமல்' கண்ணே வரவேண்டாம்.

ஈழம் சுயமாய் உழைக்கிறது
இனிமேல் மல்லி வந்திடலாம்
நானும் உனக்கு விருந்திடலாம்
நங்காய்! அதன்பின் நீ வருவாய்.

-நிலவின்தாசன்

பங்குனி மாதம் ப...
வழி நடப்பவரைப் பா...
திருந்தாலே பாபமாம். ...
தப் பொல்லாத பாபத்...
தான் செய்து கொண்டி...
தேன். சைக்கிள் முருகே...
எந்தப் பக்கத்தாலோ வி...
தடித்து ஓடிவந்து என்வீ...
வாசலிலே குதித்தார். ...
கிளைப் பூவரசு மரத்தே...
நிழலில் நிற்பாட்டிவி...
தமது சரீரத்தை உள்...
நுழைத்தார். ''ஏது, சரீ...
சக்கரத்தை வெளி...
கழற்றி வைத்துவிட்டு வ...
றது. அவசரமாகப் பே...
வேணும் போல-?'' எ...
முருகேசுவை வரவேற்றே...

''அப்பப்பா, என்...
வெயில்'' தோள் துண்...
எடுத்து விசிறிக்கொண்...
திண்ணையில் அமர்ந்...
முருகேசு.

சைக்கிள் முருகேசு ...
ஊர்க்குருவி. இனி ...
அடிக்கடி இந்தப் பகுதி...
உங்கள் முன் தோன்றுவ...
இந்த வெயில் காலத்...
காரசாரமாகத் தாளித்...
கருக்கிய மோர் குடித்...
போல சில வேளைகள...
அவர் சந்திப்பு அன்ம...
சைக்கிள் முருகேசுவை...
பற்றி ஊரிலே பல மா...
பேசிக்கொள்கிருர்கள். ...
பவோ சைக்கிளில் பேப்...
வியாபாரம் செய்தவரெ...
றும், தபால் கொடுப்பவ...
யிருந்து பென்சன் எடு...
அதன்பின் சில காலம் ...
கிள் கடை வைத்திருந்...
ரென்றும்-இப்படி அவரை...
பற்றி வரலாறு பலவ...

## நூல் மதிப்புரை

### பிலவங்க வருட பஞ்சாங்கங்கள்

வழக்கம் போல கொக்குவில் இரகுநாதையரால் கணிக்கப்பெற்ற வாக்கிய பஞ்சாங்கமும் மட்டுவில் சுப்பிரமணிய ஐயரால் கணிக்கப்பெற்றதிருக்கணித பஞ்சாங்கமும் வெளிவந்துள்ளன.

இரண்டிலும் வழக்கமான அம்சங்கள் யாவும் அடங்கியுள்ளன. நாள் நட்சத்திரங்களில் நம்பிக்கையுள்ள எல்லோரும் தாங்கள் விரும்பிய ஏதாவதொரு பதிப்பை அவசியம் வீட்டில் வைத்திருக்க வேண்டும்.

சோதிடம் சொல்வது பஞ்சாங்கத்தின் கடமையல்ல என்றுநினைத்தோஎன்னவோ ஆரூட பலன், கந்தாயபலன், மாதகோசர பலன் முதலியவற்றை திருக்கணிதம் தவிர்த்திருக்கிறது. இதற்குப் பதிலாக 'போயா விடுமுறைத் தினங்கள்' போன்ற வேறு சில அம்சங்கள் அதில் காணப்படுகின்றன.

இரண்டும் மிகத் ...
வாக அச்சிடப்பட்டுள்ள...
இரண்டினது விலை ...
ரூபாய் 2-00.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாத்திரைக் கடிதங்கள்

புள்ள சரஸ்,

ல வருடங்களுக்குப்
என் சொப்பனத்தில்
ந்தாய். பல பல கேள்
ளக் கேட்டாய்.
ாழும்புப் பேப்பரில்
ிவந்த யாத்திரைக்
ங்களை ஏனப்பா நிறு
ிட்டாய்? மீண்டும்
டர்ந்து எழுது. உன்
பவங்களையெல்லாம்
கவேண்டும்போல் உள்
எழுதுகிறாயா?'' என்று
டாய். பன்முறை நீ
ப்பனத்தில் வந்து இப்
கேட்டதும், அக்கடி
ளைத் தொடர்ந்து
வேண்டியதே என்று
ணினேன்.

றல் ஒருவித தயக்கம்
ட்டது, என்ன தெரி
யாத்திரையோ அதி
செய்யவில்லை. என்ன
ுவது? இதைப்பற்றி
ித்தேன். ஓர் எண்
உதித்தது. நமது
க்கையே ஒரு நீண்ட
திரை. எப்போது இது
பித்தது, எப்போது
முடியும் என்பது நமக்
தெரியாது. இந்த யாத்
பில் எவ்வளவோ அனு
கள், அதுவும் பேப்பர்
என்ற முறையில்
ற சுமார் 40 வருடங்
ல ஏற்பட்டுள்ள அனு
கள் கொஞ்சமன்று.
த வேலையில் ஏன்
தாய்? எப்படிச்
தாய்? என்னென்ன
ரில் இதுவரை தொண்
றிஞய்?'' என்றெல்
நீ உயிருடன் இருக்
ாது கேட்பதுண்டு.
யெல்லாம் அப்போது
துச் சொல்ல முடிய
. அப்போது சொல்ல
ாததை இக்கடிதங்கள்
தெரிவிக்கிறேன்

சியாக உனக்கு எழு
எட்டு வருடங்களுக்கு
அந்தப் பழைய
கையைப் புரட்டிப்
தன். அக்கடிதத்தை
ருந்தவிதம் எனக்கே
ளித்தது. பிலிப்
ஸ் நாட்டிலே
ா எனுமிடத்தில்

நடந்த எம். ஆர். ஏ. மகாநாட்டில், ''ஹீவாஸ் நாட்தேர்'' [அவர் அங்கு இல்லை] என்ற ஒரு கருத்துள்ள நாடகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பியபின், என் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை ஒரு காகிதத்தில் எழுதினேன். தொடர்ச்சிக்காக அதை இங்கு உனக்கு ஞாபகப்படுத்துகிறேன். என் மனமே எனக்குக் கொடுத்திருந்த சவுக்கடியைக் குறிப்பிட்டிருந்தேன்.

''உனக்கு யார்மீதும் உண்மையில் அன்புண்டா? உணர்ச்சியற்ற சுயநலப் பூச்சியே! நீ உன்னை மிக நல்லவனென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். அன்பில்லா சுயநலமியான உன்னிடம் ஆண்டவன் எப்படி இருப்பான்? பிறர் குற்றங்களை மன்னித்து விடு. உன் குற்றங்களுக்காக உடன் மன்னிப்புக் கேட்டு கடிதங்கள் எழுது. உனக்கும் நல்ல காலம் பிறக்கும்...'' என்று பளீர் பளீர் என்று சவுக்கடி விழுவதுபோல் என்னையும் அறியாமல் என் கை மளமளவென்று எழுதிவிட்டது. படித்துப்பார்த்தேன். என் மனதைத் தூய்மைப்படுத்தி ஏதோ புது வாழ்வு பிறக்கப் புது வழி காணுவதுபோல் இருந்தது.''

இக்கடைசி வரிகளை எழுதுகையில், என் வாழ்க்கையிலே உடனடியாக ஒரு புதிய திருப்பம் ஏற்படப் போகிறதென்று எதிர்பார்க்கவே இல்லை. அக்கடிதத்தை எழுதிவிட்டு, காரைநகரில் மார்கழியில் நடந்த திருவாசக மகாநாட்டுக்குத் தலைமைவகிக்க அழைப்பின் மீது புறப்பட்டுவந்தேன். மூன்று நாளில் திரும்புவதாக ஆபீஸில் சொல்லிவிட்டு, காரைநகருக்கு வந்ததும், அங்கு கண்ட பக்திக் காட்சிகள் என் மனதைப் பெரிதும் ஈர்த்துவிட்டன. காரைநகர்தான் ஈழத்துச் சிதம்பரமென்றும், திருவாதிரை அபிஷேகமெல்லாம் அவசியம் காணவேண்டும் என்றும், கொழும்பிலேயே ஓர் அன்பர் கூறியிருந்தார். இங்கு வந்து பார்த்ததும் இதை விட்டுச் செல்ல மனமில்லை. மூன்று நாள் அதிகமாகத் தங்கினேன். திருவாதிரை அபிஷேகம், தரிசனம் எல்லாம் கண்டேன். சிவஸ்ரீ கணபதீச்சரக்குருக்கள் பக்தியுடனே அபிஷேகமெல்லாம் செய்து, அருட்பிரசாதங்களை வழங்கினார். இந்த பக்தி சூழ்நிலையைக் கண்டபின், என் மனம் இப்பக்கமே அதிகம் நாடியது. கொழும்புக்குத் திரும்பிச் செல்ல மனமில்லை. என்ன செய்வது, சென்றேன். அங்கு சென்றதும், மாலையிலே வீட்டில் ஒரு கடிதம் எனக்குக் காத்திருந்தது. உடைத்துப்பார்த்தேன். ஆபீஸிலிருந்து வந்த கடிதம் அது. ''உங்கள் வேலையில் திருப்தியில்லை. உங்கள் சேவையை நிறுத்திவிட்டோம். இத்துடன் மூன்றுமாத சம்பளத்துக்கான 'செக்' வைத்திருக்கிறோம்'' என்று பொருள்பட எழுதியிருந்தது.

இதைக் கண்டதும் முதலில் சற்றே திகைத்தேன். இருபது வருடகால சேவையின் முடிவு இதுதானு? ஜப்பான் குண்டு, வகுப்புக் கலவரங்கள் முதலிய ஆபத்துக்கெல்லாம் துணிந்து நின்று தொண்டாற்றி, பத்திரிகையையும் ஐந்து ஆயிரத்திலிருந்து சுமார் 40 ஆயிரம் பிரதிகள் வரை கொண்டு வந்ததற்கு இதுதான் கைமாறு? வயது 50 க்கு மேலாகிவிட்டது, இனி எங்கே வேலை தேடுவது? குடும்பத்தை எப்படி நடத்துவது? தாய்நாடு திரும்புவதா?'' என்று மனம் ஏதேதோ எண்ணியது. என் பத்திரிகை வாழ்வும் இத்துடன் முடிந்துவிட்டதென்றே நினைத்தேன்.

ஆனால் மனத்துக்குள்ளாக ஏதோ சொல்ல முடியாத ஒரு நம்பிக்கை. சுவாமி ராமதாஸின் அனுபவ நூல்களைப் படித்ததால், ''எல்லாம் அவன் செயல், நடப்பதெல்லாம் நன்மைக்கே'' என்ற உறுதிப்பாடு ஏற்பட்டு, இனி அந்த ஆண்டவன் என்னதான் செய்கிறான் பார்க்கலாமென்று ஒருவித ஆவலுடன் இருந்தேன். என்றாலும் அடிக்கடி கவலை வந்து வந்து மறையும். இறைவனை மறக்கும்போது கவலை. நினைக்கும்போது நம்பிக்கை. மூன்றே நாட்கள்தான் இப்படி. கருணையுள்ள கடவுள் அதிகம் சோதிக்கமாட்டானல்லவா? பொறுப்பையெல்லாம் அவனிடம் ஒப்புவித்து பிரார்த்தனை செய்துவிட்டு இருக்கையில், மத்தியான வேளை யாரோ கதவைத்தட்டினார். திறந்து பார்த்தபோது சேர் கந்தையா வைத்தியநாதன். ''நீங்கள் இப்போது பழைய பத்திரிகையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். யாழ்ப்பாணத்திலே புதிய பத்திரிகையொன்று ஆரம்பிக்க முயற்சி நடக்கிறது. அதில் சேர்ந்து உதவி செய்கிறீர்களா?'' என்று கேட்டார். என்னால் நம்ப முடியவில்லை. சேர் அவர்கள்தான் என்னை இலங்கையின் கௌரவப் பிரஜையாக்க உதவியதென்பது உனக்குத் தெரியும். அவரே இந்தச் சோதனை காலத்தில், கதவைத் தட்டிக்கொண்டுவந்து இப்படி அழைக்கிறார். இறைவனே இப்படி வந்து வழிகாட்டுவதாக உணர்ந்து பதில்பேசாமல் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டேன்.

ஒரு விஷயம். எல்லாம் நம் முயற்சியால்தான் நடப்பதாக நினைக்கிறோம். ஆனால் பழைய பத்திரிகையிலிருந்து விலகி, இனி என்ன என்று மனம் தவித்துக்கொண்டு ஏதேதோ யோசித்து முயற்சிக்கையில் ஒரு பயனுமேற்படவில்லை. தெரிந்தவர்களும் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறார்கள். வேலை போய்க் கஷ்டப்படுகையில் யார்தான் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்? ஆனால் சற்றும் எதிர்பாராத முறையிலே இறைவன் சேர், கந்தையாவை அனுப்பி வைத்தாரே, அது என் முயற்சியா? கடவுள் ஒருவர் இருக்கிறார், அவர் எப்படியும் காப்பார் என்று நம் முயற்சிகளையும் பொறுப்புகளையும் விட்டுவிட்டு அவரையே நம்பியிருந்தால், அக்கருணை வள்ளல் நிச்சயம் உதவுகிறார். திக்கற்றவருக்கு தெய்வமே துணை என்ற ஆன்றோர் வாக்கு உண்மை. உண்மையென்பதை இதனால் உணரலானேன்.

நீ ஒன்று கேட்கலாம். 'அந்தக் கடவுள் அவ்வளவு நீதியும் கருணையும் உள்ளவரானால் ஏன் உன் பழைய வேலை போகவேண்டும். ஏன் உன்னை இந்தக்கவலைகளுக்கெல்லாம் உள்ளாக்கவேண்டும்' என்று. ஏன் தெரியுமா? காரணம் என்னுடையதுதான். அங்கு வேலையிலிருக்கையில்கடைசி காலத்தில் மனம் தப்பு வழிகளில் சென்றது. லட்சம் லட்சமாக முதலாளிகள் கொண்டு செல்லுகின்றார்களே. இவ்வளவு தூரம் ஆபத்துக்களுக்கெல்லாம் நின்றுபிடித்துபத்திரிகையை வளர்த்துள்ளவனுக்கு ஏன் சிறிது பங்கு கொடுக்கக் கூடாது? என்று மனதிலே ஆசையும் பொறாமையும் ஏற்பட்டது. அவர்கள் சென்னையிலே எங்கோ மூலையில் கிடந்த என்னை இலங்கைக்குக் கொண்டுவந்து, என்னையும் மனிதனாக்கி, எவ்வளவோ நன்மைகள் செய்திருந்தும் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு, அவர்கள் மீது பொறாமை வளர்த்தது எவ்வளவு நன்றிகெட்டதனம்? எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு என்றுதமிழ்வேதம் சொல்லுகிறதே. நன்றியை மறந்த எனக்கு இந்தத் தண்டனை பெரிதாகுமா?

மேலும் சென்னையிலிருந்து என்னை அழைத்து வந்தபோது, பத்து வருடங்கள் இருந்து பத்துரூபாய் சம்பாதித்துக்கொண்டு வந்துவிடவேண்டுமென்றும், அப்பத்திரிகை சொந்தக்காரர் கூறியிருந்தார். பத்து வருடங்களில் திரும்பியிருந்தால் மரியாதையாக இருந்திருக்கும். அதிககாலம் நீடித்திருந்தால் புளித்துவிடும் தானே! சரியோ தவறோ, இங்கு பிரஜையாகவும் இலங்கை மீது ஒரு விசேஷ அன்பும் உறவும் வளர்ந்து விட்டது. இதேசமயம், காரைநகரில் கண்ட தெய்வீகக் காட்சி, என்னை இப்பக்கம் இழுத்துவிட்டதென்று கூறினேனல்லவா? ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்றபடி, என்மனம் விரும்பியபடி, என்னை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றிவிட்டார். இதில் கடவுள் மீது ஏதும்தவறுண்டா? தவறெல்லாம் என்னுடையதுதானே? ஆனால் அந்தத் தவறுகளாலும், அதற்குக் கிடைக்கும் தண்டனைகளாலும் எவ்வளவு நன்மைகள் எல்லாம் ஏற்படுகின்றன! எல்லாம் நமக்குப் புரியாத ஒரு வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

சரஸ்! வீண் வேதாந்தம் பேசி உன்னை 'போர்' அடிப்பதாக நினைக்காதே. அந்த யாத்திரைக் கடிதங்களை நிறுத்தவேண்டி யேற்பட்ட காரணத்தையும், ''என் வாழ்வில் புதுவழி காண்பது போல் இருந்தது'' என்று எழுதியது சற்றும் எதிர்பாராத முறையிலே எப்படி உண்மையாயிற்றென்பதையும் விளக்கவே இதைப் பற்றி இவ்வளவுதூரம் எழுதலானேன். பத்திரிகைவாழ்விலே என் அனுபவங்களைப் பற்றி இனி தொடர்ந்துஎழுதட்டுமா?

உன் அன்புள்ள,
அப்பா.

---

# சைக்கிள் முருகேசு

நி மாதம் பகல்
ப்பவரைப் பார்த்
லே பாபமாம். அந்
ல்லாத பாபத்தைத்
சய்து கொண்டிருந்
சைக்கிள் முருகேசு
க்கத்தாலோ விழுந்
ஓடிவந்து என்வீட்டு
ல குதித்தார். சைக்
பூவரசு மரத்தோடு
நிற்பாட்டிவிட்டு
ீரத்தை உள்ளே
தார். ''ஏது, சரீரம்
த்தை வெளியே
வைத்துவிட்டு வருகி
அவசரமாகப் போக
போல-?'' என்று
வை வரவேற்றேன்.
பப்பா, என்ன
, தோள் துண்டை
விசிறிக்கொண்டே
யில் அமர்ந்தார்
.

ள் முருகேசு ஓர்
நவி. இனிமேல்
இந்தப் பகுதியில்
முன் தோன்றுவார்.
வெயில் காலத்தில்
மாகத் தாளித்துக்
மோர் குடித்தது
லெ வேளைகளில்
ந்திப்பு அன்மயும்.
முருகேசுவைப்
ரிலே பல மாதிரி
ாள்கிறார்கள். எப்
சக்கிளில் பேப்பர்
ம் செய்தவரென்
ால் கொடுப்பவரா
பென்சன் எடுத்து
சில காலம் சைக்
வைத்திருந்தவ
-இப்படி அவரைப்
ரலாறு பலவகை.

இதில் உண்மை எத்தனை பங்கு, பொய் எவ்வளவுஎன்பது பற்றி நான் ஆராய்ந்ததில்லை. அவரும் சைக்கிளும் இணைபிரியாத ஜோடி. ஒரு காலத்தில் பொம்மைக்கடைகளிலே கால்களுக்குப் பதில் இரண்டு சக்கரம் பூட்டி விலைப்பட்டகர்ப்பூரப்பொம்மையைப்போல சைக்கிள், அவரது 150 பவுண்ட் உடல் சுமையை இரண்டு கால்களிலிருந்தும் நகர்த்தி சரீரத்தின் நடமாட்டத்தைசற்றே இலகுபடுத்திவிடும் லகுசாதனமாக-லகானமாக, அமைந்து விட்டது தெரிகிறது. அதனால் வெயில் மழை பனி எக்காலத்திலும் அவர் ஊரைச் சுற்றி சைக்கிள் வலம்வந்து கொண்டிருப்பார். பலபேரைச் சந்திப்பார். பலதும் பத்தும் பேசுவார். தனது சைக்கிளை பழையகாலத்துஅசுவமேதக் குதிரைக்கும் ஒப்பிடுவார்; இந்தக்காலத்து ஸ்பூட்னிக்கும் ஒப்பிடுவார்.

## காலச் சக்கரம்

''தம்பி தெல்லிப்பிள்ளைப் பக்கம் நேற்று இன்றைக்குப் போனதுண்டோ?'' திண்ணையில் அமர்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டமுருகேசு வெற்றிலைக்குச் சுண்ணும்பு பூசிக்கொண்டே இவ்வாறு பேச்சை ஆரம்பித்தார்.

''இல்லை அண்ணே, என்ன விசேஷம்? அதென்ன தெல்லிப் பிள்ளை என்று தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளை, கீரிப்பிள்ளை, அணிற்பிள்ளை, கிளிப்பிள்ளை வரிசையிலே புதுசாகப் பெயரிட்டுச் சொல்லுகிறீர்கள். தெல்லிப்பிள்ளை, காங்கைந்துறை என்றெல்லாம்பேசிக்கொண்டது அந்தக் காலம்-''

''என்ன அந்தக் காலம் என்கிறீர். இந்த பற்றுச்சீட்டிலே என்ன எழுதியிருக்கு பாரும்''-மடிக்குள் வைத்திருந்த ஒரு காகிதத்துண்டை எடுத்து நீட்டினார். அதை வாங்கிப் பார்த்தேன். கிராமச் சங்கக் கந்தோர் சைக்கிள் நம்பர் பிளேட்டுக்கு ஒரு ரூபா வாங்கிக்கொண்டு அதற்கு எழுதிக் கொடுத்த பற்றுச்சீட்டு. பென்சிலால் தொடர் எழுத்தாக ஊர்ப் பெயர்எழுதப்பட்டிருந்தது. தெல்லிப்பிளை, தெல்லிப்பிள்ளை, தெல்லிப்பளைஎன்று எல்லா மாதிரியும் வாசிக்கலாம்.

''அந்தப்பிள்ளைக்கு என்ன வயசிருக்கும், அண்ணே?'' என்று கேட்ட[illegible]

முருகேசு திகைத்தார்.

''எந்தப் பிள்ளையைக்கேட்கிறீர்?'' என்றார்.

''கிராமச்சங்கக் கந்தோரில் உங்களுக்கு பற்றுச்சீட்டு எழுதிக் கொடுத்த பிள்ளையைத்தான் கேட்கிறேன்.''

''ஓ அதுவா? அந்தகிளாக்கர் ஓர் இளம்பிள்ளைதான்.''

''அப்படியென்றால்பற்றுச்சீட்டில் சரியாகத்தான் எழுதப்பட்டிருக்கு. தெல்லிப்பளை என்பது கிறுக்கெழுத்தாக எழுதியிருக்கு. இந்தக் காலத்துப் பிள்ளைகள் பிழைவிடமாட்டார்கள். கிராமச் சங்கத்தில் வேலைபார்க்கும் பிள்ளை ஊர்ப்பெயரைப் பிழையாக எழுதுமா? தெல்லியூர், தெல்லியம்பதி என்றெல்லாம் ஊரபிமானத்துடனே கிராமத்துப்பெயர்களைச் சுருக்கியும் புதுக்கியும் எழுதமுற்பட்டிருக்கும். இக்காலத்தில்-நீர் என்னடாவென்றால் பழைய நாளைய தெல்லிப்பிள்ளையில் இன்னமும் சுற்றிக் கொண்டு நிற்கிறீர். முருகேசண்ணே, தெல்லிப் பிள்ளையிலே அதுதான் தெல்லிப்பளையிலே எத்தனை அம்மன் கோவில்கள் இருக்கின்றன சரியாகச் சொல்லுபார்ப்போம்'' என்றேன்.

முருகேசு எண்ணிக் கணக்கிடலானார். துர்க்கை அம்மன், தோதரை அம்மன் முத்துமாரி, வேணி அப்பாலே மேற்கிலும், கிழக்கிலும் ஊரின் எல்லை தாண்டி இரண்டு அம்மன்கோவில்...

''ஏன், எதற்காகக் கேட்[illegible]ளென்று?''

''இல்லையில்லைசும்மாதான் கேட்டேன். சக்திவழிபாட்டை நினைத்தேன். வேறொன்றுமல்ல.''

''இரண்டு வாரத்துக்குமுன் சிவனை நினைத்து வழிபட்டீர். அடுத்து சக்தி வழிபாடு நடைபெறப் போகிறதாக்கும். சிவன் பெரிதா சக்தி பெரிதா?''

''சிவம் இன்றேல் சக்தி இல்லை. சக்தி இன்றேல் சிவமில்லை சிவம் பாதி சக்தி பாதி. இரண்டும் ஒன்று சேர்ந்தாலே உலக மகா சக்தி. அந்த வழிபாடு ஓங்க வேண்டும். அதனால்தான் சிவசக்தி என்று பாரதி பாடினான். சிவசக்தி-என்ன அழகான பெயர் குழந்தைகளுக்குச் சூட்டுவதற்கு! ஆணும் பெண்ணும், தலைவனும் தலைவியும் கணவனும் மனைவியும் ஒன்று. இரு கண்களைப்போல ஒரு பொருளையேநோக்குவன என்பதை உணர்த்துவதற்கு இதைவிடச் சிறந்த பெயர் உண்டா? ஓய், சைக்கிள் பூட்டியிருக்கா இல்லையா?''

''அதற்கு இன்னும் பூட்டு வாங்கிப்போடவில்லை.''

''தெருவிலே நிற்கிறதே. பத்திரமாயிருக்குமா?''

''அது களவுபோகுமென்ற கவலையே எனக்கு இல்லை. இந்த சைக்கிளை வாங்குவதற்கு எனக்கு காசு எப்படிக் கிடைத்தது தெரியுமா? வைரவருக்கு ஒரு கிடாய் நேர்ந்து விட்டிருந்தேன்.

[10-ம் பக்கம் பார்க்க]

---

ும் மிகத் தெளி
சிடப்பட்டுள்ளன.
னது விலையும்
-00. — பா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது ?

# அழகான பெண்ணை தெரிவு செய்கிறது இயந்திரம்

ஒரு பெண்ணை அழகானவள் என்று நாம் சொல்கிறோம். சிலர் அதனை ஏற்றுக் கொள்ளலாம், மற்றும் சிலர் மறுக்கலாம். ஆனால் இப்போது 'கம்ப்யூட்டர்' [மின் பொறிக் கணக்கு இயந்திரம்] நமக்குத் துணையாக வருகிறது. பெண் அழகானவளா, இல்லையா என்பதை அது அளந்து சொல்லி விடுகிறது.

ஜெர்மனிய ஆண்களின் கனவுக் கன்னிகுமாரி மேரி யேன் கோஷ். இவர் ஒரு பிரபல திரைப்பட நட்சத்திரம். இவர் உண்மையிலேயே அழகானவர்தான் என்பதை மியூனிச்நகர் 'கம்ப்யூட்டர்' இப்போது உறுதிப்படுத்தியுள்ளது.

# உணவு கெடாதிருக்க அணுசக்தி உபயோகம்

அணு சக்தியை உபயோகித்து உணவைக் கெடாமல் பாதுகக்க முடியுமென்பதை ஹாலந்து விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். ஹாலந்தில் வாகனின் ஜென் என்ற இடத்திலுள்ள ஆய்வுச் சாலையில் உணவைக் கெடாமல் பாதுகாப்பதற்கான மிக முக்கியமான ஆராய்ச்சிகள் இப்போது டச்சு விஞ்ஞானிகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

எந்தெந்த உணவை இந்த முறையில் கெடாமல் இருக்கச் செய்யலாம், அதனால் எவ்விதக் கோளாறும் ஏற்படாதா என்பவை மிக விரிவாக ஆராயப்பட்டு வருகின்றன.

## வெள்ளை நிற மனிதக் குரங்கு

முதன் முதலாக வெள்ளை நிறகொரில்லா [மனிதக் குரங்கில் ஒரு வகை] ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பூமியியல் சங்கம் இதனை அறிவித்துள்ளது.

இரண்டுவயதுக் குட்டியாகவுள்ள இந்த ஆண் கொரில்லா, வெள்ளை நிற மயிரும், சிவந்த உடலும், நீல நிறக் கண்களும் உடையதாக இருக்கிறது.

சென்ற அக்டோபரில் பிரெஞ்சுகினியில் பூமத்திய ரேகைப் பிராந்தியத்தில் வாழைத்தோட்டமொன்றில் ஒரு பெண் கொரில்லா புகுந்து தோட்டத்தில் சேதம் விளைவித்தபோது சுட்டுக் கொல்லப்பட்டது.

இறந்து கிடந்த தாயை அணைத்துக் கொண்டு அருகில் இருந்த 2 வயதுக் குட்டி வெள்ளை கொரில்லாவாக இருந்தது.





சென்ற் அந்தோனிஸ் குறூப்

516, ஸ்கினேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 4261, 4261.


# ★ சுவையான பல தகவல்கள்

## இந்து மகாசமுத்திரம் பற்றிய தகவல்கள்

கடந்த 1961-ம் வருடத்திலிருந்து 1965-ம் வருடம் வரை இந்துமகா சமுத்திரத்தில் பல நாடுகளும் சேர்ந்துகொண்ட ஆராய்ச்சியின்போது சேகரிக்கப்பட்ட தகவல்களை வகைப்படுத்தி முடிவுகாண அதில் பங்கு கொண்டுள்ள இந்திய, வெளிநாட்டு விஞ்ஞானிகளுக்குக் குறைந்தது 20 வருடங்களாகும் என்று தெரிகிறது.

2கோடியே 80 இலட்சம் சதுர மைல் பரப்பைக் கொண்ட இந்துமகா சமுத்திரம் உலகின் மேற் பரப்பில் 10 சத விகித அளவிற்கே உள்ளதென்றாலும் அது அவ்வளவாக அறியப் படாததாகும்.

மிகக் குறைவாக ஆராயப்பட்ட பகுதிகளில் இந்து மகா சமுத்திரம் ஒன்றாக இருக்கலாம்.

1873-ம் வருடத்திலிருந்து 1957-ம் வருடம் வரையிலான காலத்தில் சுமார் 24 கப்பல்கள்தான் அங்கு கடல் ஆராய்ச்சி நடத்தின.

இந்துமகா சமுத்திர ஆராய்வு முயற்சி 1961-ம் வருடத்தில் ஆரம்பிக்கப் பட்டது. 23 நாடுகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட கப்பல்கள் நவீன விஞ்ஞான சாதனங்களுடன் அக்கடலை ஆராய்ந்துள்ளன.

ஆராய்வுத் தகவல்களிலிருந்து அக்கடலின் அடிநில உட்கூறு ஏற்ற வற்றங்கள், நீரோட்டங்கள், ரசாயனத் தன்மை, அக்கடலில் உள்ள தாவர விலங்கு, வாழ்க்கை ஆகியவை பற்றிய அரிய தகவல்கள் கிடைக்கலாம்.

## 125 பரிசுகள் பெற்ற குதிரை

மேற்கு ஜெர்மனியில் தாண்டுவதில் மிகப்பிரசித்தி பெற்ற ஹல்லா என்ற குதிரைக்கு வயது 21 தான். இது 125 தடவை பரிசுகளைப் பெற்றிருக்கிறது. இக் குதிரைக்கு 5 குட்டிகள் பிறந்திருக்கின்றன. உலக சாம்பியன் ஹான்ஸ் குந்தர் லிங்ளரிடம் இக் குதிரை வந்து சேர்ந்த பின்பு இது மூன்று ஒலிம்பிக் தங்க மெடல்களை பெற்றுள்ளது. 17 வயதில் இதற்கு 5 குட்டிகள் பிறந்தன. இந்த ஐந்தும் தாண்டுவதில் இதன் தாயையும் மிஞ்சக் கூடியவை.

## காய் கறி பழங்களைக் கழுவும் இயந்திரம்

காய் கறிகளையும், பழங்களையும் மிக சுத்தமாகக் கழுவுவதற்கான இயந்திரம் ஒன்றை விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்யும் டச்சுக் கம்பனி தயாரித்துள்ளது.

## இடதுகை எழுத்தாளர்கள்

இடது கையால் எழுதுபவர்களை நிலையான புத்தியில்லாதவர்கள், அறிவு தீட்சண்ய மற்றவர்கள், விரைவில் உணர்ச்சிவசப் படுபவர்கள் என்றெல்லாம் கூறுகின்றார்கள். ஆனால் இடதுகையால் எழுதுபவர்களில் பிரபலமானவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவ்விதபிரபலமானவர்களில் சிலர்:

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஹாரி எஸ். ட்ரூமன், நவீன ஓவியத்தை உருவாக்கிய பிகாசோ, ஹொலிவூட் நகைச்சுவை நடிகர் டானிகே, உலக சாம்பியனான வெஸ்ட் இன்டீஸ் கிரிக்கெட் கோஷ்டி காப்டன் சோபேர்ஸ். வரலாற்றுக் காலத்துக்கும் போவோமானால் எகிப்திய பேரோமன்னர்களில் அனேகரும் ரோமின்சீசர்களும் இடதுகை எழுத்தாளர்களே!

இங்கிலாந்து மன்னர் ஆறும்ஜோர்ஜ், பிரான்ஸ் நாட்டுப் பேரரசன் சார்ல்மேன், உலகப்புகழ் ஓவியர் ரபேல், பிரபல விஞ்ஞானி லியோனர்டா டாவின்சி ஆகியோரும் இடதுகை எழுத்தாளர்களே!

சேகரிப்பு:
கணேஷ்

# காச நோயை குணப்படுத்தும் மானின் பால்

சோவியத் யூனியனிலுள்ள அஷ்கானியாநொவா மிருகக் காட்சிசாலையிலுள்ள ஊழியர்கள் கடந்த பல ஆண்டுகளாக மறிமானிலிருந்து பால் கறந்து வருகிறார்கள். இந்தப் பால் பசுப் பாலிலும் பார்க்க கூடுதல் வளமிக்க ரசாயன சத்துக்கள் உள்ளதாகும் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மூன்று மடங்கு கூடுதல் கொழுப்பும், பன்னிரண்டு மடங்கு கூடுதல் புரதச் சத்தும் இதில் உள்ளன. இது கோடைகாலத்தில் திறந்து வைத்த நிலையில் கூட நீண்ட காலத்துக்குப் பசுமையாக இருக்கக் கூடியது. இதில் வியாதிகளைக் குணப்படுத்தும் மருந்துத் தன்மை உள்ளது. காச நோயையும், வயிற்று எரிகட்டிகளையும் குணப்படுத்த இது பெருந்தொகையான மக்களுக்கு உதவியுள்ளது.

## 'கோமாளி' சேஷ்டை புரிபவரல்ல

கோமாளி என்றால் நாடகத்திலோ, சர்க்கஸிலோ வரும் நகைச்சுவைப் பாத்திரம் ஏற்று நடிப்பவர் என்றுதான் பலருக்குத்தெரியும். ஆனால் இப்படி ஒரு நோயும் இருக்கிறது. ஆம், மாட்டுக்கு வரும் ஒருவித நோய்க்குப் பெயர் 'கோமாளி'.

## வாழ்வு உயர . . .

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ளாடி நடக்கும் பொழுது தான் அவை தேவை என்கிறீர்களா?''

என்ன அழகாகக் கேட்டு விட்டான். அவன் கேட்டதில் எந்தத் தவறுமிருப்பதாகஎனக்குத் தெரியவில்லை.

''நீ கூறுவது சரிதான் தம்பி. ஆனால் நீ புரிந்தது தவறுதானே? இந்த உணர்ச்சிகள் இப்படிவயதில் சாதாரண மானவைதாம். தப்பில்லைதான். ஆனால் இந்த வயதில் முன்னேற மனமே இன்றிஇருக்கலாமா?'' -அப்பொழுது அவன் கூறியது என்னைத் திகைக்கவைத்தது.

''வயிறு நிரம்புகிறது, வண்டி ஓட்டுகிறேன். வேறென்னவேண்டும்? எல்லோருமே வண்டி ஓட்டாமல் விட்டால் வண்டியை யார் ஓட்டுவது?'' என்றான்.

''வயிறு நிரம்புகிறது, அதனால் நெடுக வண்டியே ஓட்டிக்கொண்டு இருப்பேன் என்று கூறுதே. எந்தச் செல்வந்தருக்கும் வயிறு நிரம்பாமலா விடுகிறது? பின் அவர்கள் ஏன் மேலும் மேலும் சேகரிக்கிறார்கள் பணத்தை? வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று ஏன் மேலும் மேலும் ஆசிக்கிறார்கள்? தண்ணீர் வயலில் நிரம்பி விட்டது என்பதற்காக குளத்தில் நீர் சேமித்து வைக்காமலா விடுகிறார்கள்? நீ கூறுவது தவறு தம்பி, தவறு.''

''என்னவோ ஐயா, எனக்கு இதெல்லாம்பற்றித் தெரியாது. இதைப்பற்றி அறியவும் நான் சிந்தித்ததில்லை. உங்கள் உபதேசத்தை வேறு யாருக்கும் கூறுங்கள். நான் போகிறேன்' -அவன் சென்றுவிட்டான்.

என்னுடைய கேள்விக்கு இப்பொழுது விடை கிடைத்து விட்டது என்றுதான் கூறவேண்டும்.

மீண்டும் அந்த மூட்டை தூக்கும் இளைஞனை நினைத்துக் கொண்டேன்.

அவனைப்போல் உள்ளவர்கள் நிச்சயம் ஒரு சமயம் முன்னேறி விடுவார்கள் வாழ்க்கையில். கற்காதவர்களிலும் ஒரு சிலர் முன்னேறுவதற்குக் காரணம், அவனைப் போல் மனம் படைத்திருப்பதனால்தான். அவனது அந்த மனம் — வாழவேண்டும் என்ற துடிப்புள்ள 'விடாமனம்' - அது ஏணி போன்றது. வாழ்க்கையில் முன்னேற்றிவிடும். அதேசமயம் இந்த வண்டி ஓட்டும் இளைஞனையும் நினைத்துக் கொண்டேன். இவனைப் போல் பந்தபாசத்திற்குட்பட்டு கற்காதவர்களில் பலபேர் இருக்கிறார்கள். கல்லாதவர்களில் பலர் முன்னேறாததற்குக் காரணம் இவனைப்போல்மனம்படைத்திருப்பதனால்தான். இவனது மனம் — வாழுகிறதே போதும் என்ற 'சாதாரண மனம்'. இது சிரிய வாழ்க்கைக்கு உதவும். ஆனால் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உதவாதே! அந்தஸ்தில் உயர்வதற்கு உதவாதே!

மிகச்சிலர்தான் 'அந்தத் துடிப்புள்ள இளைஞ'னின் 'விடாமனம்' உடையவர்களாயிருப்பார்கள். அதுகிடைப்பது அரிது. அதனால்தான் படிக்காத பல ஏழைகள் முன்னேறாதிருக்கிறார்கள்.

சிந்தனைக்கு முற்றுப்புள்ளி கிடைத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ் படங்கள் பார்க்காத நடிகர் இந்த ராதா

'யோகி' எழுதுகிறார்

நடிப்பதற்கென்றே பிறந்துவிட்ட பிறவி நடிகர் ராதாவின் இயற்கை நடிப்பும், இணையில்லா பாச உணர்ச்சியும், நடிகருள் மேதை என்பதை விளக்கும். எப்பாத்திரம் என்றாலும் எதிர்ப்புக்கூறாமல் நடிக்ககூடியவர்தான் ராதா. வானமே தகர்ந்தாலும் கொண்ட கொள்கை விடாதவர். நடிக்கும் போதே பகுத்தறிவையும் புகுத்தியவர். நகைச்சுவையினாலேயே புதுமைக்கருத்துக்களைப் புகுத்தியவர். கடந்த 35 வருடங்களாக கலையுலகில் தொண்டாற்றி வரும் ராதா, பண்புள்ளவர், பழகுவதற்கு இனிமையானவர். அவரின் நடிப்பை ரசிப்பதற்கென்றே ஒரு ரசிகர் கூட்டம் இருக்கிறது.

ராதா தினமும் காலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு எழும்பமாட்டார். யாராவது எழுப்பிவிட்டால்தான் எழும்புவார். காலையில் எல்லாவித பண்டங்களையும்சாப்பிடுவார். இவருக்கு கலர் உடைகள் தான் பிடிக்கும். மனிதனாக இருக்கவேண்டும்என்பதுதான் அவர் விரும்பும் பண்பு. கெட்டவர்களைமட்டும் பார்த்துவிட்டால், தான் ரொம்பக் கோபக்காரன் எனஅவரே கூறியுள்ளார். தனக்குப் பிடித்த நடிகை இறந்து விட்டாள் எனக்கூறிய ராதா, யார் என்பதைக் கூறவில்லை.

'தெருக்கூத்துக்கும், நாடகத்திற்கும் உள்ள வித்தியாசம்தான், அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும்உள்ளவேற்றுமை. ஆனால் அக்காலத்தில் எல்லாரும்யோக்கியமானவர்கள்'-இது ராதாவின் கண்டுபிடிப்பு.

ராதாதமிழ்ப்படங்களே பார்ப்பதுகிடையாது. எப்பொழுதாவது நல்ல ஆங்கிலப்படமென்றால் பார்க்கப்போவார். புத்தகங்கள் படிப்பதே கிடையாது. ராதா எதற்கும் பயப்படாதவர். தவறு என்று அவர் நினைத்துவிட்டால் ஆத்திரமடைந்து விடுவார். இவருக்கு குழந்தைகள்என்றால்வேப்பங்காய். எந்தக்குழந்தைசுளையும் எடுத்துக் கொஞ்சமாட்டார். இவருக்கு பிடித்த ஒரே ஒருதலைவர் ராமசாமி பெரியார்தான். கட்சியையும் கலையையும் வெவ்வேறாகக்கருதுபவர்.

ராதாவிற்கு நடிகவேள் என்றபட்டத்தை, மதுரையில் அழகிரிசாமி சூட்டினார். அப்பொழுது மக்களுக்கும் ராதாவிற்கும் சச்சரவு ஏற்பட்டது. ராதா துணிந்து நாடகங்கள் மூலம் கொள்கைகளைப் பரப்பினார்.

ராதா பலவிதமாகப் பேசக்கூடியதிறமையுடையவர். ஒரு தனியறையில் விட்டால் அவர் ஒரேசமயத்தில் 5 பேர் பேசுவது போல் பேசக்கூடியவர்.

ராதாவுக்குப்பல மனைவிகள் உண்டென்றுபலர்பலவிதமாகப் பேசிக்கொண்டபோதிலும், அவரை இப்பொழுது அன்பாகப் பார்த்துவருவதுஇலங்கையைச்சேர்ந்த சிங்களப் பெண்கீதாதான். நாடகக் கோஷ்டியுடன் சென்றபோது காதலித்து இப்பெண்ணை மணந்துகொண்டார். நடிகர் ராதாவின் நடிப்பை மீண்டும் காண முடியுமா?

நாடக விமர்சனம்:

## திரை கடல் தீபம்

வே. சத்தியமூர்த்தி


'அன்பு மணி'யின் கலைக்கழக முதற்பரிசு பெற்ற 'திரைகடல் தீபம்' நாடகம் கண்டி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் கண்டி கலைக்கழகத்தினரால் நடாத்தப்பெற்றது.

கண்டியிலே இதுவரை மக்கள் பார்த்திராத வகையில் காட்சிசோடனைகளையும், கண்ணைக் கவரும் உடைகளையும், சிறந்த நடிகர்களையும் கொண்ட இந்த நாடகத்தைப் பார்த்தவர்கள், மனத்திருப்தியுடன் வெளியேறினார்கள்.

இலங்கை அரசை இழந்த அரசன் பல்லவ நாட்டு மன்னனிடம் சரண்புகுந்து பின் தனது நாட்டை மீட்கப் போராடும் கதையமைப்பைக் கொண்ட இந்த நாடகத்தில் கதாநாயகனாக நடித்த ரி. தங்கவடிவேல் திறமையாக நடித்திருந்தார். அதி அற்புதமாக நடித்தார். கதாநாயகியாக நடித்த செல்வி காஞ்சனமாலாவின் நடிப்பு வில்லனின் முன் சீறும்போதும், பல்லவன் முன் பணிவாக நடந்த போதும், காதலன்முன் குறும்புப் பேச்சின் போதும் சிறந்த நடிகை என்பதை நிரூபித்துவிட்டது! வில்லனாக வந்து சபையிலே நடிப்புக்காக கைதட்டல் பெற்று தனது திறமையான நடிப்பால் நாடகத்திற்கு பெருமை தேடித்தந்தவர் நாடறிந்த நடிகர் ஏ. ரகுநாதன் என்றால் மிகையாகாது. மிடுக்கு நடையும், அசட்டுச் சிரிப்பும், அவரின் நடிப்புக்கு மெருகூட்டுவனவாக இருந்தது!

பல்லவ நாட்டு மன்னனாக வந்து மன்னனாகவே மாறி 'வீரன் மாமல்லன்' என்ற பெயருக்கே உதாரணமாக விளங்கியவர் ஏ. மரியநாயகம். தளபதி பரஞ்சோதியாக வந்து தளபதிக்குரிய மிடுக்குத் தோற்றத்துடன நடித்து பரஞ்சோதியாகவே மாறிவிட்டார், இ. பிரேமகாந்தன். 'தளபதி பரஞ்சோதி உலக வாழ்வை வெறுத்து பரஞ்சோதிஅடிகளாக மாறிய காட்சியிலே அசல் சாதுவாக நடித்து, ரசிகர்களின் கைதட்டலைப் பெற்று மனதில் பதிந்துவிட்டார். கப்பல் படைத் தலைவனாக நடித்த திரு. சின்னையா, புலிகேசியாகநடித்த திரு. தவதாசன், திரு. சுப்பிரமணியம் திரு. அ. நமசிவாயம் ஆகியோரும் பரவாயில்லை.

டைரக்ஷன் பொறுப்பை திரு. ஏ. ரகுநாதனும், ரி. தங்கவடிவேலும் ஏற்றிருந்தார்கள்.



## நடிகை தேவிகா திருமணம் எப்போது?

அவரே பதில் கூறுகிறார்

நடிகை தேவிகாவுக்குத் திருமணம் எப்போது?

அவரே அது பற்றி விளக்கிக்கூறினார்!

'ஞாயிறும் திங்களும்' படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக சாரதா ஸ்டுடியோவுக்கு வந்திருந்தார். அப்போது தனது திருமணம் பற்றி மனந்திறந்து சொன்னார்:-

நான் திருமணம் செய்துகொள்ள நினைக்கிறேன். ஆனால் இப்போது இல்லை. என்னுடைய சகோதரிகளுக்குத் திருமணம் முடிந்ததும் திருமணம் செய்துகொள்வேன்.

ஆனால் என் திருமணம் காதல் திருமணமா, பெரியவர்கள் பார்த்து முடிவு செய்யும் திருமணமா என்றும் இப்போது கூற முடியாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூற முடியும். எளியமுறையில் திருமணம் செய்துகொள்ளவே ஆசைப்படுகிறேன். என்னுடைய திருமணம் தடபுடலாக நடக்காது. பலஆயிரம் ரூபாய்செலவு செய்து ஓட்டல்களில் விருந்தும் நடத்த மாட்டேன்.

என்திருமணத்தை முன்னிட்டு ஏழைகளுக்கு சாப்பாடு போடுவேன். சென்னையில் உள்ள தெருக்களில் பசியால் வாடிக்கிடக்கும் ஏழைகளை அழைத்து சோறுபோடுவேன். ஏழைகளுக்கு வேட்டி, சேலை கொடுப்பேன். இதில்தான் மகிழ்ச்சி ஏற்படும்.

## கலை அரங்கம்

தொடர்கட்டுரை

## வாஹினியில் நான்!

எஸ் அருமைநாயகம்

ஓர் ஆவி ஆகாய மார்க்கமாகவோ அல்லது அறையொன்றிலோ உலாவித் திரியும். அதன் கால்கள் ஆடாது நிற்கும் நிலையில் காணப்படும். ஆனால் ஆவி அறையில் நடமாடும் போது அங்குள்ள மேசை கதிரை மற்றும் பொருட்களையெல்லாம் ஊடுருவிச் செல்வதுபோல் காணப்படுவதை பல படங்களில் பார்த்திருக்கலாம். முதலில் ஆவியாக நடிக்கும் நபரை கறுப்புத் திரைக்கு முன்னால் விட்டுப்படமாக்குவார்கள். பிலிமில் அந்த உருவம் மாத்திரம பதியும். அந்த உருவம் பதிந்தஇடத்தைதவிர்ந்த ஏனைய பகுதி புதிதாகவே இருக்கும். ஆவியைப்படமாக்கிய பிலிமின் நீளம் ஐம்பது அடி நீளமென்றால், அந்த ஐம்பது அடியையும் 'கமெரா'வில் பின்னுக்குச் சுற்றவேண்டும். பின்னர் அறையில் ஆவி எந்தஇடத்திலிருந்து எந்த இடத்திற்குப் போக வேண்டுமோ அவ்வளவையும் படமாக்கவேண்டும். இப்போது ஆவி படமாக்கப்பட்ட பகுதியின் மேலும் அறையின்காட்சிகள் இலேசாகப் பதியும். "டபிள் எக்ஸ் போசர்" என்று இதை அழைப்பார்கள்.

ஒரே நடிகர் இரண்டு வேடங்களில் ஒரே நேரத்தில் தோன்றுவார். எங்க வீட்டுப் பிள்ளையில் எம். ஜி ஆரும், உத்தம புத்திரனில் சிவாஜியும் நடித்ததைப் போல, ஒருவர் வில்லனென்றும் மற்றவர் கதாநாயகனென்றும் வைத்துக் கொள்வோம். இருவருக்கும் கீழ்வரும் வசனம் இருக்கிறதென்றும் வைத்துக் கொள்வோம்.

வில்லன் 'என்னடா முழித்துப் பார்க்கிறாய்? உன்னைக் கொன்றுவிடுவேன்!'

கதாநாயகன்: 'அப்படியா? முதலில் ஒரு பரிசு தருகிறேன், அதை வாங்கிக்கொள்.' [என்றுசொல்லிக் கொண்டு வில்லனின் முகத்தில் ஒரு குத்து விடுகிறான். வில்லன் கீழே விழுந்துவிடுகிறான்.]

முதலில் வில்லன் தனது வசனத்தை நடித்துக் கொண்டு பேசுவது படமாக்கப்படும். அப்போது அவன் தனக்குமுன்னே கதாநாயகன் நிற்பதாகக் கற்பனை செய்துகொண்டு அவன் எங்கு நிற்பானோ அவனுடைய முகம் எவ்வளவு உயரத்தில் இருக்குமோ அந்த இடத்தைப் பார்த்துக்கொண்டு பேசுவான். பேசிமுடிந்தவுடன் கதாநாயகன் பேசவேண்டிய வசனத்தை உதவி டைரக்டர் பேசுவார். பேசி முடிந்ததும் குத்து விழுமல்லவா? அந்தஇடத்தில் வில்லன் தனக்குக் குத்து விழுந்து விட்டதாகப் பாவனை செய்து கொண்டு கீழேவிழுவான். படப்பிடிப்பு நிறுத்தப்படும்! பின்னர் வில்லன் மேக்கப்பைக் கலைத்துவிட்டுக் கதாநாயகனாக மேக்கப் செய்துகொண்டு வருவார்.

'கமெரா'வில்வில்லனைப் படமாக்கிய பிலிம் பின்னுக்குத் திருப்பிச் சுற்றப்படும்!

இப்போதுகதாநாயகன் வில்லனுக்கெதிரே தான் நிற்கவேண்டிய இடத்தில் வந்து நின்று (இருவரும் நிற்கவேண்டிய இடங்கள் தரையில் சோக்கட்டியினால் அடையாளம் செய்யப்பட்டிருக்கும்) நடிக்கத் தொடங்குவான். முதலில் வில்லன் பேசிய வசனம் உதவிடைரக்டரினால் பேசப்படும். அது முடிந்ததும் கதாநாயகன் தான் பேசவேண்டிய வசனத்தைப் பேசிவிட்டு வில்லன் முன்பு நின்றிருந்த இடத்தில் அவன் முகம் எந்த இடத்திலிருந்திருக்குமோ அதே இடத்தில்

### இரட்டை வேடங்கள் இப்படித்தான் படமாகின்றன!

காற்றில் ஓங்கி ஒரு குத்து விடுவான். கமெரா நிறுத்தப்படும்.

முதலில் வில்லனைப்படமாக்கும்போது அவனுக்கு மட்டுந்தான் வெளிச்சம் கொடுக்கப்படும். கதாநாயகன் நிற்க வேண்டிய இடம் இருட்டாக இருக்கும்.

அதுமட்டுமன்றி கமெரா லென்ஸ் முன்னாலும் கதாநாயகன் நிற்க வேண்டியபக்கம் கறுப்புக் கடதாசியினால் மறைக்கப்பட்டிருக்கும். ஆகவே பிலிமில் அந்த இடம் பதியாது. அந்த இடத்திலுள்ள 'எமல்சன்' என்னும் படம்பதியும்மருந்து பாதிக்கப்படாமல் புதிதாக இருக்கும். பின்னர் அதேமாதிரி கதாநாயகனைப் படமாக்கும் போது வில்லன் நின்ற இடத்தில் ஒளி கொடுக்க மாட்டார்கள். [இன்னும் வரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலச்சக்கரம் .....

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

அது இரண்டு கிழமைக்கு முன்னமாக நல்ல காசுக்கு விலையாச்சு—''

''ஓகோ அந்தக் காசுக்கு புதுச்சைக்கிள் வாங்கிவிட்டீர். அதனுலே இந்த வாகனத்தையும் வைரவசுவாமி பாதுகாப்பார் என்று நம்பிக்கை போல-? ஓய், இப்பவெல்லாம் வைரவகோவிலுக்குள்ளே நுழைந்து வைரவசூலத்தையே பிடுங்கிக் கொண்டுபோய் அதைக் கொண்டு வீடுகளுக்கு கன்னம் வைக்கிருனுகள், காணும். கண்ணை மூடிக் கொண்டு புதுச்சைக்கிளைக் கண்டஇடத்திலும் போட்டு விடாதேயும். ஏன் முருகேசு அண்ணை நீர் சைக்கிள் ஓடத்தொடங்கி இப்போ எவ்வளவு காலமிருக்கும்?''

''எனக்கு ஆறு வயசாகியிருக்கும் போதே நான் தெருவிலேசைக்கிள்வளையம் உருட்டத் தொடங்கிவிட்டேன். அதன்பின் 15 வயசில் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்த நாளில் வீட்டிலே அப்பு வைத்து ஓடிய சைக்கிளை அவர்இல்லாதசமயம் களவாகத்தூக்கி ஒரு கமுகமரத்தோடு சாய்த்து வைத்துவிட்டு ஒரு கையால் கமுகமரத்தைப் பிடித்துக் கொண்டு சைக்கிளில் ஏறி உட்காருவேன். இப்படி சில தினங்கள் நின்று பயிற்சியான பின் ஒருநாள் கமுகமரத்தில் பிடித்த கையை விட்டு கால் பெடலை அமுத்தினேன். சைக்கிள் முன்னே ஓடியது. ஐயையோ இப்படி ஓடுகிறதே என்று கூச்சலிட்டேன். அதற்குள்ளாக நானும் சைக்கிளும் ஒரு குப்பைக் கிடங்குக்குள்ளே ஒன்ருகக் கட்டிப்புரண்டோம். நல்லவேளையாகதப்பினேன். நான் சைக்கிள் ஓடப் பழகியதே! இப்படி யாருடைய உதவியுமில்லாமல்தான். இரண்டாம் பேருக்குத்தெரியாது. ஆனல் எப்படியோ சைக்கிளில் நேராக உட்கார்ந்து ஓடப்பழகிவிட்டேன்'' இவ்வாறு சொல்லிக் கொண்டு எழுந்த முருகேசு ''நான் வருகிறேன் தம்பி'' என்று விடைபெற்று நடந்தார்.

—கதிரவன்

# இந்த வாரத்தில் உங்கள் பலன்

பண்டித வித்துவான் எம். வி, பாலசுந்தரம் பி. ஓ. எல்., எவ். ஆர். ஏ. எஸ்

மேடம்-இவ் வாரம்சிறந்த வாரமெனலாம். குடும்பத்தில் கெளரவம் ஏற்படும். பொருள் வருவாய் அதிகமேற்படும். காரியானுகூலம் உண்டெனினும் தடைகள் இடையிடையே ஏற்படும். கடன் தொல்லைகள் கட்டுக் கடங்கும். சத்துருக்களின் தொல்லைகள் குறைவடையும்.

இடபம்- இவ்வாரம் மத்திமமான பலனைத் தரும் வாரமாகும். சிலர் படுக்கை நோய்வாய்ப்படுவர். செலவுகள் கட்டுக் கடங்காது போகும். வீடுகளிலுள்ள கால் நடைகள் இறக்கும். சந்தோஷமான செய்தி இனபந்துகளிடையில் நிகழும்.

மிதுனம்- இவ்வாரம் நற்பலனைத் தரும் வாரமெனினும் இடையிடையே மனச்சஞ்சலமேற்படும். செலவுகள் அதிகமேற்படும். கடன் தொல்லையால் மனவேதனையுண்டு. வழக்கு வகையினருக்கு வெற்றியீட்டும் வாரமெனலாம். வார இறுதியில் பொருள் வரவுண்டு. நன்மையான செய்தி கிடைக்கும்.

கடகம்- இவ்வாரம் சிறந்ததொரு வாரமாகாதெனலாம். சத்துருக்களால் தொல்லைகளுண்டு. உயிரினங்கள் அழிவுறும். எதிர்பாராத வகையில் வழக்கு வகையினருக்கும், பரீட்சை வகையினருக்கும் சித்தியும் வெற்றியுமுண்டு. தொழில் மாற்றம், இடமாற்றம். காரியங்கள் பொதுவாகத் தாமதமாகவே நடைபெறும்.

சிங்கம்- இவ் வாரம் திரவியலாபம் அதிகமேற்படும். சூது, பந்தய வகையினருக்கு இவ் வாரம் மிக்க பலன் தரும் வாரம். பொருள் வருவாய் சாமானியமாகவே இருக்கும். கடன்கள் வசூலிக்கப்படும். கடன் தொல்லைகள் நீங்கும். பொதுவாக இவ்வாரம் நற்பலனைத் தரும் வாரமாகும். உத்தியோக வகையினருக்கு எதிர்பாராத முன்னேற்றங்கள் உண்டாகும்.

கன்னி- இவ்வாரம் சிறந்த வாரமாகும். காரியானுகூலமுண்டு. நோய் நீங்கும். பொருள் கஷ்டம் இவ்வார மத்தியில் நீங்கிப் பணவரவுண்டாகும். உத்தியோக வகையினருக்கு பதவிப் பேறுண்டு. எதிர்பாராத வகையில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களால் திரவிய லாபமேற்படும். இனபந்துக்களின் கொண்டாட்டம் உண்டு.

துலாம்- இவ் வாரம் நற்பலனைத் தரும் வாரமெனலாம். காரியானுகூலம் உத்தியோகத்திலுள்ளார்க்குண்டாகும். கொடுக்கல்வாங்கல்களினுல் மனக்கேடுண்டாகும். உடல் நலமுண்டெனினும் தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். இவ் வாரத்தில் நன்மையான பலன்களும், மாங்கல்யச் சிறப்புகளும் நிகழும்.

விருச்சிகம்- இவ்வாரம்மத்திமமான பலன்களைத் தரும் வாரமெனலாம். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் நீங்கும். தனப்பெருக்கமுண்டாகும். பொருள் பற்றுக்குறைவு சிறிது நீங்கும். உத்தியோக வகையிலுள்ளோர்க்கு பல முன்னேற்றமான காரியங்கள் நிறைவேறும். வாழ்க்கையில் எதிர்பாராத வகையில் பல இன்னல்கள் தோன்றி மறையும்.

தனு- இவ் வாரம் மத்திமமான பலன்களைத் தரும் வாரமெனலாம். விரோதிகளின் தொல்லையால் மன அமைதி குலையும். குடும்பத்தில் பல கஷ்டங்கள் தோன்றி மறையும். செலவுகள் சாமானியமாகவே நடைபெறும். உத்தியோகத்தருக்குபதவிகளில் உயர்ச்சி தடைப்படும்.

மகரம்- இவ்வாரம்நன்மைகள் அதிகம நிறைந்த வாரமாகும். இவர்கள் பொதுவாகப் பயவாழ்க்கையை மேற்கொள்வார்கள். குடும்பத்தில் சுகம் காணும். புத்திரப்பேறு இல்லாதவர்களுக்குப் புத்திர உற்பத்தியுண்டு. காரியானுகூலம் தடைப்படுதலுண்டு. செலவுகள் வீண் காரியங்களினுல் விரயமாகிப் பணமுடையுண்டு. கன்னிப் பெண்களுக்குக் கல்யாணம் நடைபெறுதலுமுண்டு.

கும்பம்- இவ் வாரம் மத்திம பலன் தரும் வாரமெனலாம். குடும்பத்தில் இருந்த கவலைகள் நீங்கும். வயிற்றில் ரோகம் காணுதலுண்டு. போட்டிகளில் ஈடுப

[11-ம் பக்கம் பார்க்க]

## தமிழர் என்போர் ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

காணப்படவில்லை. அகன்ற மண்டைகளும் காணப்படவில்லை.

திருநெல்வேலி ஈமத்தாழிகள் மட்பாண்டங்களும் வெளியே தாழியைச் சூழ்ந்து பிறபொருள்களும் காணப்பட்டன. வேறுட்டுத் தாழிகளுக்கு வெளியில் பொருள்கள் காணப்படவில்லை. தாழியின் உட்புறம் சிவப்பாகவும் வெளிப்புறம் மினுமினுப்பாகவும் இருக்கின்றன. எல்லாத் தாழிகளும் சூளையிட்ட மண் மூடிகளால் மூடப்பட்டுள்ளன.


குடக்கல் அல்லது குடைக்கற் சமாதிப் புதையல்களும் காணப்படுகின்றன. இவை ஆறு முதல் எட்டடிக் குறுக்களவும் நான்கடி ஆழமும் உடையனவாகப் பாறையிற் குடையப்பட்டவை. இவற்றுக்கு மூடிகளிருக்கின்றன. மலையாளத்தில் காணப்பட்ட குழிப்பிணப்புதையல் தொளை எனப்படும். இது பாறையில் செங்கோணமாகக் குடையப்பட்டுக் கல் மூடியால் மூடப்பட்டுள்ளது. கிரேத்தாத்தீவில் (crete) இவ்வகைப் புதையல்கள் தொளை என அறியப்பட்டன.

கல்வட்டங்களுக்கு நடுவில் வெட்டப்பட்ட கல்லறைகளில் பிணங்களை அடக்குதல் தென்னிந்தியாவிலும் பார்க்க தக்காணத்தில் அதிக வழக்கிலிருந்தது. சுடுவோர், இடுவோர், குழிப்படுவோர், தாழ்வயினடைப்போர், தாழியிற் கவிப்போர் என மணிமேகலை அக்காலத்திற் பிணங்கள் அடக்கஞ் செய்யப்பட்ட வகைகளைக் கூறுகின்றது.

நீலகிரியில் பாண்டுக்குழி [பாண்டவக்குழி] என்னும் வகைப்பிணஅடக்கங்களிருந்தன. போரில் இறந்த வீரருக்கு வீரக்கல் நாட்டப்பட்டது. இது கொல்லிக்கல் எனக்கூரக்கில் வழங்கும். இது வீரக்கல், மாஸ்திகக்கல், மகாசதிக்கல் எனவும் பெயர் பெறும். இப்பிண அடக்கங்களில் பல பழம் பொருள்கள் காணப்பட்டன. அவை பல்வேறு காலங்களைச் சேர்ந்தவை. அவற்றுட் சில ஈட்டி, எறிஈட்டி, அம்புத்தலைக்கத்தி, அரிவாள், இரும்புப்பாரை என்பன. இவைகளுட் சிலவற்றுக்கு மரக்கைப் பிடிகள் காணப்பட்டன.


வெண்கல ஆபரணங்கள், வெண்கல ஆயுதங்கள், மணிகள், அப்பிரகத் துண்டுகள், நெல்லுமி, பாளையுள் வைக்கப்பட்ட தினை முதலியன ஆதிச்சநல்லூரிற்காணப்பட்டன. நெற்றிப்பட்டம் போன்ற பொன்னுபரணங்களும் தாழியும் காணப்பட்டன. நீலகிரியில் சுடுமண் விலங்குகள் காணப்பட்டன. ஆதிச்சநல்லூர் உருவங்கள் உலோகத்தில் வார்க்கப்பட்டவை. அங்கு கிடைத்த வீட்டுவிலங்குகளின் உருவங்கள் எருமை, ஆடு, செம்மறியாடு, கோழி என்பன. புலி, யானை முதலிய காட்டுவிலங்குகளினுருவங்களும் காணப்பட்டன. அங்கு காணப்பட்ட பாரைகள், அரிவாள்கள், நெல்லுமி, சிறுஆடைத்துண்டு, நன்ருகப் பதஞ் செய்யப்பட்ட களிமண்ணுலான மட்பாண்டங்களென்பவை அக்காலத்தில் வேளாண்மையும் உலோகக்கைத்தொழிலும். பிற தொழில்களும் வளர்ந்திருந்தனவென்பதைத் [illegible]கின்றன.


## தந்தையைப்போல் தனயன்



தன் தந்தையைப் போலவே மகனும் ஓஸ்டர்மில்க் அருந்தி, ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்.

ஓஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஓஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஓஸ்டர்மில்க் அருந்தும் குழந்தைகள் பெலஞன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

# ஓஸ்டர்மில்க்

கிளக்ஸோ-அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.

179/66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி ள ம் ப ர ம்

## நகை ஏல விற்பனை

நிவித்திகலை 37 நி. கடையில் அடைவுபிடிக்கும்யாழ்ப்பாண ஸ்டோரில் 16-10-64 முதல் 31-3-67 வரை அடைவு வைத்து திருப்பப்படாத தங்கம் பொன் நகைகளை 1967-ம் வருடம் ஏப்ரல் 15-ம் திகதி காலை 9 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

பி. வெங்கடேசன்
ஏலத்தார்.

1717

## பட்டினசபை வல்வெட்டித்துறை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவரால் வல்வெட்டித்துறைப் பட்டின சபையின் மீன் சந்தைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டுஆட்டிறைச்சிக்கடைகளிலும், இரண்டு கருவாட்டுக் கடைகளிலும் 1967-ம் ஆண்டு ஆனி மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1967-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதி வரைக்கும் வியாபாரம் செய்யும் உருத்திற்குக்கேள்விப்பத்திரங்கள் 1967-ம் ஆண்டுசித்திரைமாதம்15-ம் திகதி முற்பகல் 10.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 11-4-67-ம் திகதி பிற்பகல்இரண்டு மணிவரை ஒவ்வொருகடைக்கும் பத்திரப்பணம்ரூபா5/-ம்வைப்புப்பணம் ரூபா15/-ம் செலுத்தி இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இதைப் பற்றிய விபரங்களை இக் காரியாலயத்தில் அலுவலகநேரங்களில் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்,

வி. இரத்தினவடிவேலு
[ஒப்பம்]
தலைவர்
பட்டினசபை
வல்வெட்டித்துறை,

பட்டினசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
30-3-67.

1723

**MANOHARA**
**JAFFNA**

Daily at:
10-30, 4-45, 7-00, 9-45 P.M.

Alfred Linch,
Diana Dores
in
WEST II

(Adults only)

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
வைஜயந்திமாலா
நடித்த
**அதிசயப்பெண்**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.
நடித்த
**தெய்வத்தாய்**

## பாரதி இல்லம் சாம்பியனாகியது

கோண்டாவில், வெள்ளி

கோண்டாவில் கிழக்குமறுமலர்ச்சி விளையாட்டுக் கழக இல்லங்களுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பாரதி இல்லம் இவ்வருட சாம்பியனாகியது.

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] **ராஜ்** [நீர்கொழும்பு]

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயாதினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-30 மணிக்கு

வியப்பு, திகைப்பு,
விறுவிறுப்பு
அனைவரையும் மகிழ்விக்கும்
அற்புதப் படைப்பு
தாய்ப்பாசம், அன்பு
அனைத்துக்கும் ஓர்
எடுத்துக்காட்டு.



**எம். ஜி. ஆர். — சரோஜாதேவி**
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா, கீதாஞ்சலி, பண்டரிபாய்
நடிக்கும்
அன்னை பிலிம்ஸ்

# தாயின் மடியில்

2-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மற்றும் பல திரைகளில்

**இருவல்லவர்கள்**

## TENDER NOTICE

### Urban Council Vavuniya

Sealed tenders are invited on forms obtainable from this office for the supply of the following for the year 1967 up to 12 noon on 15-4-67.

The cost of tender form for each item as specified in the schedule should be sent when applying for tender forms. This amount is not refundable Tender forms will be issued up to 2 p. m. on 8-4-67. Envelopes enclosing tender forms should be marked "Tender For Supplies 1967".

### Schedule

1. Supply of electcricity materials & tools etc:
RS 25-00
2. Supply of printing items & stationery items
RS 10-00
3. Supply of items to sanitation branch, such disinfectants, conservancy & scavenging materials etc.
RS 25-00

Sgd: M. PONNIAH
CHAIRMAN

Urban council,
Vavuniya.
29-3-67 1722

## திருவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டை புளியங்கண்டு பிள்ளையார் கோவில் கடைசித் திருவிழாவான நேற்று விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரானின் கதாப் பிரசங்கமும் மற்றும் இன்னிசைக் கச்சேரிகளும் இடம் பெற்றன. இரவு விநாயகப்பெருமான் முத்துச் சப்பரத்தில் வீதிவலம் வந்தார்.

## வாரபலன...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டுவோர்களுக்கு வீண் குரோதங்கள் உண்டு. சூதாட்டம் செய்வோர் விலகுதல் நன்மை தரும்.

மீனம்- இவ்வாரம் சிறந்த பலனைத் தரும் வாரமெனலாம். வியாதியால் மனச் சஞ்சலப் படுவர். பெரியோர் உதவியுண்டு. தொழில் கேடுண்டு எனினும் குடும்பத்தில் அதிக செல்வாக்கும் அதிகாரப் பேறுமுண்டு. சந்தோசமான கருமங்கள் இனத்தில் நிகழும். வழக்குகளில் ஈடுபாடுடையோர் வெற்றியடைவார்கள். இவ்வாரஇறுதியில் எல்லாம் நன்மையாகவேநடைபெறும்.

## உலகமேடை..

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டில் வாய்ப்பில்லை. மக்கள் தங்கள் கஷ்டங்களை வெளியில் சொல்லக்கூட சர்வாதிகார ஆட்சியில் மக்களுக்கு உரிமையில்லை.

இந்தியாவில் ஜனநாயகம் பல சோதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் நிலைபெற்று வருகிறது. பாகிஸ்தானில் ஜனநாயகத்துக்கு இடமில்லை. ஆயினும் ஜனநாயகத்தை வளர்க்கவும் நிலைநாட்டவும் உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதே தங்கள் இலட்சியம் எனக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா, இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஒரே நிலையில் வைத்துப் பார்ப்பது ஏன்?

**REGAL - JAFFNA**
Daily at 4-45, 7-00, 9-45
Jean Marais
Mylene Demongeot
in
FANTOMAS

# வரி விளம்பரம்

## காணவில்லை

28-3-67 ந் திகதி [Pioneer Radio tuner] ஒரு பயனியர் றேடியோ ரியூனரும், ஒரு பவ் மின்சார தையல் மெசினும் களவாடப்பட்டுவிட்டன. கண்டுபிடிப்பதற்கு தகவல் கொடுப்பவர்களுக்கு ரூ. 100/- சன்மானம் வழங்கப்படும். தகவல் விளம்பர இல:1681, ஈழநாடு மே/பா, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்கவும். 1681

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசப்பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## புரட்சிச் சதி வழக்கு

கொழும்பு, சனி

பெப்ரவரிமாதத்தில்நடைபெற்றதான சதி வழக்கு விசாரணை மீண்டும் பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் ஆரம்பமானபோது முதலாவது எதிரி ஞானசீக தேரோ தான் குற்றவாளியல்ல எனத் தெரிவித்தார்.

விசாரணை ஆரம்பமாகியதும் ஞானசிக தேரோவின் வழக்கறிஞர் திரு. கே. சி. டி. சில்வா சில பொலிஸ் உத்தியோகத்தர்களை விசாரணைக்கு அழைக்கவேண்டும் என்று விடுத்த மனுவை மாஜிஸ்திரேட் நிராகரித்தார்

இதனைத்தொடர்ந்து ஞானசீகதேரோ அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது:- தான் குற்றவாளியல்ல. நான் முன்னர் கொடுத்த வாக்குமூலத்தை மாற்றியே இங்கு கூறுகின்றேன். சில பல தூண்டுதல்கள் காரணமாகவே முன்னர் அப்படியான வாக்குமூலத்தை நான் கொடுத்தேன். இத்தூண்டுதல்களை ஆனந்த செனிவரத்தினவே கொடுத்திருந்தார். இவர் என்னைப்பொய்யான தகவல்களைக் கொடுக்கும்படி கூறியதன் காரணமாகவே நான் பிழையாக வாக்குமூலம் கொடுத்தேன். ஆகையால் நான் முன்னர் கொடுத்த வாக்குமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

விக்கிரமசிங்கா, அமரதுங்கா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

## கலை, கைப்பணி ஆசிரியர் கூட்டம்

புன்னாலைக்கட்டுவன், சனி

யாழ் மாவட்டத்திலுள்ள சகல கலை கைப்பணி ஆசிரியரையும் விரிவுரையாளரையும், வடமாநில வித்தியாதிபதி, ஏப்ரல் 4ம் திகதி கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கூட்டமொன்றுக்கு அழைத்துள்ளார்.

புதிய கல்வித்திட்டத்தின் கீழ் இவ்வாசிரியரின் பங்குகளும் கடமைகளும் எவையென்பதை விளக்கவும், கலை கைப்பணிப் பாடங்களுக்கு அளிக்கப்படவிருக்கும் முக்கியத்துவத்தைப் பற்றியும் இக்கூட்டத்தில் விளக்கப்படுமெனத் தெரிகிறது.

## விற்பனைக்கு

கார், லொறி:

[1] 2 சிறி 6000 இலக்க ஹோல்டன் கார். [2] டீசல் ஒஸ்ரின் லொறி 22 சிறி 2980. ஒருவரின் பாவனை. நல்ல நிலையில் உள்ளன. விபரம் "சல்மா விலாஸ்" வடக்கு வீதி, புத்தளம். 1683

## தேவை

நடிகைகள்

பெண்கள் சேர்ந்து நடிக்கும் நாடகத்தில் நடிப்பதற்கு நடிப்பு அனுபவமுள்ள பெண்கள் தேவை. முடிவு திகதி 10-4-67. விளம்பரஇல.1676, ஈழநாடு மே/பா, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1676

ஆசிரியர்

பிற்பன் சுருக்கெழுத்து, தட்டச்சு ஆங்கிலத்திலும் மற்றும் வர்த்தகபாடங்களை க. பொ. த. சாதாரண உயர்தரப் பரீட்சை மாணவர்கட்கு தமிழிலும் போதிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தேவை. வர்த்தக தராதரப்பத்திரம் பெற்ற இளைப்பாறியஆசிரியர் விரும்பப்படுவர். வேதனம் கோரி நற்சான்றிதழுடன் 10-4-67 க்கு முன் விண்ணப்பிக்கவும். வே. நாகநாதன், உபதலைவர், நகரசபை, பருத்தித்துறை. 1680

## வாடகைக்கு

மேல்மாடி:

யாழ்ப்பாணம் பெரியகடை மத்தியில் 36 அடி 12 அடி விசாலமுள்ள மேல்மாடி வாடகைக்குண்டு. காரியாலய பாவனைக்கு மிகவும் சிறந்தது. விரும்புவோர் விளம்பர இல. 1669, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குஎழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1669

## கல்வி

வகுப்புகள்:

வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சை பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். பெண்களுக்குப் பிரத்தியேக வகுப்புகள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1673

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/ வர்த்தகம் விசேட பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1674

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சித்தி அடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ பிரதான வீதி, முள்ளியவளை. 1675

வகுப்புகள்:

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, புத்தக வைப்புமுறை [ஆங்கிலம், தமிழ்] ஆரம்பமாகி உள்ளன. ஏனைய கலை விஞ்ஞானம் முதலிய வகுப்புகளுக்கும், மேற்படி வர்த்தக வகுப்புகளுக்கும் சேரவிரும்பும் மாணவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். கணேசன் கல்வி நிலையம், அளவெட்டி. 1682

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானப்படிப்பு உத்தியோகத்துக்கல்ல

## ஆராய்ச்சிகள் செய்யவேண்டும் என்கிறார் கல்லூரி அதிபர்

மாவிட்டபுரம், சனி

''விஞ்ஞானத்தில் உன்னதப் பட்டம் பெற்றவர்களுங்கூட உத்தியோகத்தில் நாட்டம் செலுத்துகின்றனர். தங்கள் நாட்டிற்கு வேண்டிய கமத்தொழில், கைத்தொழில் முதலியவற்றில் புதிய ஆராய்ச்சிகள் செய்வதற்கு அவர்கள் முன்வரவேண்டும்.''

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றபொழுது கல்லூரி வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

''விஞ்ஞான அறிவை மாணவர்கள் தங்கள் சுற்றுடலுக்கேற்றபடி விருத்தி செய்துகொள்ள வேண்டும். விஞ்ஞானம் ஏட்டுப் படிப்புடன் நின்றுவிடும் பாடமன்று. மாணவர்கள் விஞ்ஞான அறிவைப் பெருக்கிக் கொள்வதாக இருந்தால் செய்கை முறைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். உயர்தரக் கல்வி பெறுகின்ற மாணவர்களின் விஞ்ஞான அறிவு அவர்களுக்கு நல்ல பயனைக் கொடுக்கப்போவதில்லை, நாட்டுக்கும் நன்மை பயக்கமாட்டாது. விஞ்ஞானத்தில் உன்னதப் பட்டம் பெற்றவர்களுங்கூட உத்தியோகத்தில் நாட்டம் செலுத்துகின்றனர். இவர்கள் நாட்டிற்கு வேண்டிய கமத்தொழில், கைத்தொழில் ஆகியவற்றில் புதிய ஆராய்ச்சிகள் செய்வதற்கு முன்வரவேண்டும். இத்தகைய மாற்றம் ஏற்பட்டால் நாடு முன்னேறும்.

இவ்விழாவில் இலங்கைப் பிரித்தானிய கலாசாரசபையின் முதல் பிரதிநிதியும், கலாசார ஆலோசகருமான திரு. ஆர். கே. பிராடி பரிசளிப்புரை நிகழ்த்தினார். திருமதி வே. சண்முகநாதன் பரிசில் வழங்கினார்.


### LESSONS

**DRVING**

Scientific driving, taught for all vehicles. In your own vchicle or ours. Here your commercial vchicles checked by us before presentation for annual fitness. Motor machanism & high way code taught. Prudent Master learners, Near Secreteriat, 62, Kandy Road, Jaffna. Branches: Kandy Road, Chavakachcheri. Paranthan - Kilinochchi. Telephone: 7239. 1684


## ஆசிரியர் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருமதி நவரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:

விஞ்ஞான விவசாய ஆசிரியர்களின் சம்பள உயர்ச்சி பற்றிய பொறுப்பு என்னிடமில்லாத போதும் அவர்கள் நலன் கருதிசந்தர்ப்பம் வரும்போது உதவ நான் முயற்சிகளை மேற்கொள்ளுவேன். இந்தப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் இடமாற்றம் அந்த வட்டாரத்திலேயே பிரயோசனப்படக்கூடிய பாடசாலையில் நடைபெற ஒழுங்குகளை எடுப்பேன். இந்த ஆசிரியர்கள் ஒரு மாதிரிப் பண்ணையை அமைப்பதில் ஊக்கம் செலுத்தவேண்டும். அவர்களுக்கான விவசாயப் பாட வழிகாட்டி விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

# கிணற்று நீரில் நஞ்சு கலந்திருந்ததா?

## ஆஸ்பத்திரியில் 115 பேர் அனுமதி

கொழும்பு, சனி

கிணற்றுநீர்குடித்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். களுத்துறை ஆஸ்பத்திரியில் பாடசாலைப்பிள்ளைகள் உட்பட 115 பேர் சிகிச்சை அளிக்கப்பட்டனர். இவர்களில் 55 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெபுவன பொலிஸ் பகுதியில் தலாஹிட்டிய என்ற இடத்தில் அங்குள்ள பாடசாலை ஒன்றுக்குச் சமீபத்திலுள்ள கிணற்றில் நேற்று நீர்அருந்தியவர்கள் வாந்தியெடுக்க தொடங்கியதுடன் மயங்கியும்விழுந்தனர். இவர்கள் உடனடியாகக் களுத்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களில்சிலர் ஆபத்தான நிலையிலிருந்தனர். பாடசாலை சிறுவர்கள் வழமைபோல் தங்கள் மதிய உணவான 'பணிஸ்' சாப்பிட்டுவிட்டு இக்கிணற்று நீரைக் குடித்தனர். அவர்களும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

## ரயிலில் மதுவிற்பனைக்குத் தடை

கொட்டாஞ்சேனை, சனி

நேற்று போக்குவரத்து மந்திரி காரியாலயத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. ஹூருல்லே அக்டோபர் மாதம் முதல் எல்லா புகையிரதங்களிலும் புகையிரத நிலையங்களிலும் மது விற்பனையைத் தடை செய்யும் உத்தரவை பிறப்பித்தார்

## விவசாயிகளின ...,

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேனநாயகா உத்தரவிட்டுள்ளார்.

உணவு, விவசாய அபிவிருத்தி தேசிய சபைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

நெல்உத்தரவாத விலைத் திட்டத்தைச் சரியானமுறையில் செயல்படுத்துவதற்கு இடையூறாக இருக்கும் உத்தியோகத்தர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கும்படியும் பிரதமர் கூறினார்.

### சிறிய நீர்ப்பாசனக் குளங்கள்

காணி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா இக்கூட்டத்தில் பேசுகையில் 280 சிறிய நீர்ப்பாசனக்குளங்களைத் திருத்துவதற்கான திட்டங்கள்தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் இவற்றில் 80 குளங்கள் தனியார் துறையினரால்திருத்தப் படவிருப்பதாகவும் தெரிவித்தார். இதர குளங்கள் விவசாயப் படையினரால் திருத்தப்படுமென்று அவர் சொன்னார். மேலும் 890 சிறிய நீர்ப்பாசனக் குளங்கள்திருத்தப்படவிருப்பதாகவும் அந்தந்தப் பகுதி மக்கள் இக்குளங்களைத் திருத்த முன்வந்தால் அரசாங்கம் அவர்களுக்கு உதவியளிக்கும் என்று அமைச்சர் சி. பி. டி. சில்வா தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் சில நிறைவேற்றப் படாமலிருப்பதற்கு, அவசியமான இயந்திரசாதனங்கள்பற்றாக் குறைதான் காரணமென்றும் விரைவில் இவை அமெரிக்காவிலிருந்து வந்துசேர விருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா பேசுகையில் ஊழல்,மோசடிகளில் ஈடுபடும் பலநோக்கச் சங்கங்களின் நிர்வாகசபைகள் கலைக்கப்பட்டு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றார்.

## இந்தியா திரும்புவோர்க்கு புனர்வாழ்வு

சென்னை, ஏப். 1

பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தாய் நாடு திரும்பும் இந்திய வம்சாவழியினருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

மாத்தூர், மதுரை பால் பண்ணைகளில் குடியமர்த்தவும், தூத்துக்குடி கூட்டுறவு நூற்பு ஆலையிலும், மற்றும் அனுதை இல்லம், பாடசாலைகள் அமைக்கவும் 80 லட்சத்து 53 ஆயிரத்து 500 ரூபாய் கடன் வழங்கவும் மத்திய அரசாங்கம் சம்மதித்துள்ளது.

## நால்வர் பலி

பம்பாய். ஏப். 1

மத்திய பம்பாயில் ஒரு கட்டிடம் இடிந்து விழுந்து வயோதிபர் ஒருவர் உட்பட நான்கு பேர் மாண்டனர். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி சமாஜ மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் கிழக்கு கூட்டுறவுப்பகுதி உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நுகர்ச்சியாளர் மொத்த சமாசங்களில் யாழ்ப்பாணம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜமே மிகவும் பெரியதாகவிருக்கின்றபடியாலும், அவசர தேவையாக, சமாசத்தின் பல பிரிவுகளையும், நிர்வாகப் பிரிவையும் உள்ளடக்கக் கூடியவாறு, பட்டணத்தின் தகமைக்குத் தக்கவாறும், சகல பொருட்களையும் கொள்ளக்கூடிய விசாலமானதாகவும், ஒரு தகுதியான கட்டடத்தை யாழ்ப்பாணத்தின் வியாபாரப்பகுதியில் முக்கியமான ஒரு மத்திய இடத்தில் நிர்மாணிப்பதுபற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.


# சிங்கம் மார்க்

# சந்தனாதித்

# தைலம்

யாழ்ப்பாணப் பகுதி ஏஜண்ட் என். எம். எஸ். & பிரதர், கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org